பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 1-25

பொது சன நூலகம்

# ஈழநாடு



THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆவணி 4 [illegible] ஜுலைகஸ் 22 இதழ் 187
யாழ்ப்பாணம் [illegible] திங்கட்கிழமை 20-8-84

மீனம்பாக்கம் விமான நிலையத்தில்

## வெடிகுண்டு பயமுறுத்தலால் நேற்று திடீர் பரபரப்பு

(சென்னை)

அண்மையில் பாரியகுண்டு வெடிப்புக்கிலக்கான சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு நேற்றுக்காலை ஒன்பது முப்பது மணியளவில் மீண்டுமொருவெடிகுண்டு பயமுறுத்தல் விடுக்கப்பட்டது.

இதனையடுத்து நேற்று அங்கு பதட்டமேற்பட்டது. விமான நிலைய அதிகாரிகளும், பயணிகளும் அப்புறப்படுத்தப்பட்டனர். விமான நிலையமெங்கும் தீவிர சோதனை மேற்கொள்ளப்பட்டது.

பயணிகளின் பொருட்கள் யாவும் விமானநிலைய நுழைவாயிலில் வைத்து கடுமையாக சோதனை செய்யப்பட்டது.

இதனால் விமானங்கள் யாவும் தாமதித்தே போக்குவரத்தினை ஆரம்பித்தன இவ்வானமேதய மிரட்டலில் எவ்வித உண்மையுமில்லை எனப்பின் தெரியவந்ததும் வழமைபோல் யாவும் நடைபெற்றன. (து)

## அமைச்சர்கள்பற்றி விசாரிக்க கமிட்டி

[சென்னை]

தமிழ்நாட்டில் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள்மீதான குற்றச்சாட்டுகளை

(8-ம் பக்கம் பார்க்க)

கச்சேரியில் ஒய்வூதியம் பெற்றுவந்தவர்களுக்கு

# குருநகர் தற்காலிக வங்கியில் இன்று முதல் ஒய்வூதியம்

## திணைக்கள ஊழியர்களுக்கு நாளையதினம் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கச்சேரியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையிலிருந்து ஒய்வூதியம்பெற்றுவந்தவர்களுக்கு இன்று முதல் குருநகரிலுள்ள தேசியக் கூட்டுறவுக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக இலங்கை வங்கிக் கிளையில் ஒய்வூதியம் வழங்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

தினமும் காலை 9மணி முதல் ஒரு மணிநேரமே செயல்படவிருக்கும் இந்தக் கொடுப்பனவு நான்கு தினங்களுக்கு நீடிக்கும்

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### மேலதிக பஸ்

குருநகர் செல்வதற்கு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து மேலதிக வ. போ. ச. பஸ்சேவை இன்று முதல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்த பஸ்சேவையின் இலக்கம் 790 ஆகும்.

நாளை செவ்வாய்கிழமை யாழ். மாவட்டத்திலுள்ள

(8ம் பக்கம் பார்க்க)

## இவர்களுக்கு ஒய்வூதியம் இன்று இறுதி முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள தபாற்கந்தோர்களில் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஒய்வூதியம் வழங்குவது பற்றி இன்னும் இறுதிமுடிவு செய்யப்படவில்லை. இன்று இதுபற்றி இறுதிமுடிவு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை அல்லது புதன்கிழமை இவர்களுக்கு ஒய்வூதியம் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம் தபாற்கந்தோரில் இவர்களுக்கு ஒய்வூதியம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்குப் பொலிசார் சாத்தியமில்லையெனத் தெரிவித்துவிட்டதாகக் கூறப்படுகிறது. யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஒய்வூதியத்தை வழங்குமாறு பொலிசார் ஆலோசனை தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

நேற்று விடுமுறையாதலால் இந்த ஆலோசனை பற்றித் தபாற்கந்தோர் ஊழியர்களின் முடிவை அறியமுடியவில்லையென்றும்; இன்று தபாற்கந்தோர் ஊழியர் தங்கள் முடிவைத் தெரிவிப்பார்கள் என்றும் கூறப்படுகிறது. [க]

## 2-வது சபைபற்றி இன்று கூட்டணித் தலைவர்கள் ஆலோசனை

[கொழும்பு]

2-வது சபை பற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்வது பற்றி இன்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள்கொழும்பில்கூடிஆலோசிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மன்னாரில் நிலைமைகளை நேரில் கண்டறிவதற்காக அங்கு சென்ற கூட்டணித் தலைவர்கள் இன்று கொழும்பு திரும்புவார்கள் என்றும் நாளை பண்டாரநாயக்கா மகாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜனாதிபதி ஏற்பாடு செய்துள்ள கட்சிக் குழுத் தலைவர்கள், பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்துகொள்வதா? இல்லையா? என்பது பற்றியும், இம்மன்றத்தினால் தமிழ் மக்களுக்கு நன்மைவிளைய முடியுமா என்பது பற்றியும் இன்று ஆலோசனை நடத்துவார்கள் என்றும் எதிர்பார்க்கப்டுகின்றது.

2வது மன்றம் தொடர்பாக

(8ம் பக்கம் பார்க்க)

## கம்யூ. கட்சி கூட்டத்தில் கலந்துகொள்ளாது

(கொழும்பு)

2 வது சபைத்தொடர்பாக ஆலோசிக்க நாளையதினம் ஜனாதிபதியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குழுக்களின் தலைவர்கள் கூட்டத்திற்கான அழைப்புஇலங்கைகம்யூனிஸ்ட் கட்சிக்கு நேற்றுமாலைவரை அழைப்பு கிடைக்கவில்லை, அவ்வாறு அழைப்புகிடைத்தாலும் கம்யூனிஸ்ட்கட்சி கலந்துகொள்ள மாட்டாதென அக்கட்சியின் செயலாளர் திரு. ஏ. பி. சில்வா கூறினார்.

2-வது சபை பற்றிய யோசனையை நாம் முற்றாகவே எதிர்க்கின்றோம் அப்படியிருக்க எமக்கு எப்படி அழைப்பு அனுப்புவார்கள் என்று கேட்ட திரு சில்வா, இனப்பிரச்னைக்குஅரசியல் தீர்வு காணப்படவேண்டுமென்பதே எமதுகொள்கை, 2வது சபையைத் தவிர வேறு ஏதாகிலும் ஆக்கபூர்வமான யோசனையை ஏதாவதொரு அரசியல் கட்சி தெரிவிக்குமானால் அது பற்றி ஆலோசிக்கவும் மகாநாட்டில் கலந்துகொள்ளவும் நாம் தயாராயிருக்கின்றோம் என்று திரு. சில்வா வலியுறுத்தினார்.

## காயமடைந்த 25 பேர் தெல்லிப்பழையில் சிகிச்சை

[மாவிட்டபுரம்]

சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை, கைதடி, மாவிட்டபுரம் ஆகியஇடங்களில் காயம் அடைந்த 25 பேருக்கு மேற்பட்டவர்கள் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்கள்.

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ள மேற்படி நபர்களுக்கு தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை டாக்டர்களும், தாதிகளும் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

பெரும்பான்மையானவர்களுக்கு காலிலும், கையிலும் முதுகிலுமே காயம் ஏற்பட்டுள்ளது.

இங்கு சிகிச்சை அளித்தும் இயலாதவர்கள் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

மேற்படி நபர்களை வெளி

(8ம் பக்கம் பார்க்க)

இவ்வாசிரியர்கள்

## இடமாற்றக் கடிதத்தை கல்வித் திணைக்களத்தில் பெறலாம்

(கொழும்பு)

அடுத்த மாதம் 1-ம் திகதியிலிருந்து வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் தமது இடமாற்றக் கடிதத்தையும் புதிய பாடசாலை பற்றிய விபரத்தையும் அந்தந்த பிராந்திய கல்வித் திணைக்களங்களில் பெற்றுக் கொள்ளலாம் இத்தகவலை கல்விச் சேவைக் குழு உறுப்பினர் கலாநிதி ஆ. கந்தையா தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த ஆசிரியர்களில் 170 தமிழ் ஆசிரியர்களுக்கு வடக்கு - கிழக்குக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களது பெயர்ப் பட்டியல் பத்திரிகைகள் மூலம் வெளிவந்துள்ளன. இவர்கள் தமது இடமாற்றக் கடிதத்தைப் பெற கொழும்பிலுள்ள கல்விச் சேவைக்குழுவுக்கு வரத் தேவையில்லையென்றும் கல்விசேவைக்குழுவிலேயே இடமாற்றக் கடிதங்கள் வழங்கப்படுவதாக வெளிவந்த செய்திகள் தவறானவை கொழும்புக்கு ஆசிரியர்கள் வந்துவீணாக அலையவேண்டாம் என்றும் கலாநிதி கந்தையா தெரிவித்

(8ம் பக்கம் பார்க்க)

பாதுகாப்பு கருதி

## கொழும்பு சென்ற 15 பேர் ரயில் நிலையத்தில் கைது

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு கருதி வடக்கிலிருந்து கொழும்பு சென்ற 15 இளைஞர்கள், கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் வைத்துகைது செய்யப்பட்டார்கள்.

இவர்கள் கடந்த வியாழக்கிழமை நண்பகல் ரயில் மூலம், கொழும்பு சென்றார்கள்.

நெல்லியடியில் பதட்ட நிலை ஏற்பட்டதை தொடர்ந்து அங்கு இருப்பதுபாதுகாப்

(8ம் பக்கம் பார்க்க)

## எட்டு இளைஞர்கள் விடுதலையாகி வந்தனர்

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டித்துறை, பருத்தித்துறைப் பகுதிகளில கைது செய்யப்பட்ட இளைஞர்களில் எட்டுப்பேரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலைசெய்யப்பட்ட இளைஞர்களில் சிலர் நேற்றுக் காலை கொழும்பிலிருந்து புறப்பட்டு ரயில்மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு, கொண்டு செல்லப்பட்ட இளைஞர்கள் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டுவருகிறார்கள்.

கடந்த வாரமும் விடுதலை செய்யப்பட்ட சில இளைஞர்கள் ரயில்மூலம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர். [க]

# விளம்பரம்

## விற்பனைக்கு

ஒவ்வொருநாளும் அநேக விதப்பொருட்கள் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. ஆனல் ஞாயிற்றுக் கிழமைகளிலும் போயா தினங்களிலும் பல விதப்பொருட்களும் விசேஷ போட்டி விலைகளில் விற்பனையாகும். விபரங்களுக்கு முத்திரைக் கவருடன் விண்ணம்பிக்கவும் கார்த்திகேசு ஏல விற்பனை நிலையம் கோப்பாய். 1251

BAIRAHA FARMS HISEX வெள்ளை, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 20-ந் திகதி விநியோகிக்கப்படும். சற்குணராசா பிறதர்ஸ் பிரம்படி, கொக்குவில். 1244

நாவற்குழி - கண்டி வீதியில் அருணு பேக்கரிக்கு முன்பாக 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். விபரங்கள்: அருணு பேக்கரி, நாவற்குழி 1367

## தேவை

இளைப்பாறிய தலைமை குமாஸ்தா (Tea Estates) நிர்வாகம், கணக்கு, ஆங்கிலத் தட்டெழுத்து நன்கு தெரிந்தவர், நியாயமான சம்பளத்துடன் யாழ்ப்பாணத்தில் வேலைதேடுகின்றார். தொடர்பு கொள்க: விளம்பர இலக்கம் 1362 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1362

## வகுப்புக்கள்

I. C. M. A. A, B, P I, II, and III I.A.A, Chartered Preliminary வகுப்புக்கள் கொழும்பு விரிவுரையாளரால் Business Institute பிள்ளையார் வீதி, ஆனைக்கோட்டை வடக்கு, ஆனைக்கோட்டை. 1345

I. C. M, A. PART II வகுப்புக்கள், புகைப்படக் கலைப்பயிற்சி, Communication English Classes கொழும்பில் போதித்த ஆற்றல் மிக்க ஆசிரியர்களால் நடாத்தப்படும். ராதாகிருஷ்ணஸ் பொலிரெக்னிக், 392, நாவலர்வீதி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர். (1383)

## காணவில்லை

மெலிந்த கறுப்பு நிறமான 12 வயது 3½ அடி உயரமுள்ள சுந்தரி என்று அழைக்கப்படும் சிறுமியைக் காணவில்லை. கடைசியாக சிவப்புப் புள்ளியிட்ட பச்சை நிறச் சட்டை அணிந்திருந்தார். கண்டவர் உடன் அறிவிக்கவும். G. சிவம், 141, பருத்தித்துறை வீதி, நல்லூர். (1393)

கடந்த திங்கட்கிழமை (13-8-84) கைதடிச் சந்தியில் நடைபெற்றஅசம்பாவிதத்தில் எனது மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரிச் சான்றிதழ், அடையாள அட்டை, இத்துடன் நான்கு பேனைகள், ஒரு அளவு நாடா, குறிப்புப் புத்தகம் இவைகளை ஒரு பையுடன் தவறவிட்டுவிட்டேன். கண்டெடுத்தவர்கள் கைதடிச் சந்தியில் இருக்கும் ''சீக்கோ'' கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையத்தில் கையளித்து சன்மானம் ரூபா 100 பெற்றுக் கொள்ளவும். குறிப்பு: 18-8-84 பத்திரிகையில் சன்மானம் ரூபா 300/- என தவறுதலாக வெளிவந்தமைக்கு வருந்துகிறோம். (1368)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்
சுன்னுகம் உடுவிலைச் சேர்ந்த காலஞ் சென்ற அழகரட்ணம் பெண் தெய்வநாயகி என்பவரது மரண சாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்.
—மரணமெய்தியவர்.
வழ. இல: ரி/3814
சுப்பிரமணியம் அழகரட்ணம், உரும்பிராய்தெற்கு, உரும்பிராய்.
—மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு ஆவணி மாதம் 24ம் திகதியன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1984ம் ஆண்டு ஆடி மாதம் 6ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி.
கு. குலசிங்கம்
பதிவாளர்.

வரைதல்;
சு. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.
1359

# "2-வது சபையால் இனப்பிரச்னையை எவ்வாறு தீர்க்க முடியும்?"

## ஆயர்கள் மன்றம் அரசிடம் கேள்வி

(கொழும்பு)

சர்வகட்சி மகாநாட்டில் ஜனதிபதியால் முன்வைக்கப்பட்ட இரண்டாவது சபை பற்றியும், அது எவ்விதம் இனப்பிரச்னைக்குத் தீர்வு கொடுக்கக்கூடுமென்பதைப் பற்றியும் விளக்கங்கள் கோரப்பட வேண்டும் என்று இலங்கைக் கத்தோலிக்க கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் மன்றம் கொழும்பில் ஒன்று கூடி, திருச்சபையினதும், ஏனைய நிலைமைகள் குறித்தும் ஆராய்ந்தது.

இந்த உரையாடலின் போது நாட்டின் இனப்பிரச்னை குறித்து நீண்ட நேரம் ஆராயப்பட்டது.

சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்எனவலியுறுத்தியஆயர்கள், வன்செயல்களால் இதற்குத் தீர்வு காணமுடியாதென்றும் தெரிவித்துள்ளனர்.

மதுபோதைவஸ்து போன்ற பழக்கம் நாட்டுமக்களிடையே அதிகரித்து வருவதைக் கண்டித்து பிரசாரம்செய்யவேண்டுமென்றும், இயேசு கிறீஸ்து நாதர் பிறந்ததினமான கிறிஸ்மஸ் அன்று மது விற்பனை செய்வது தடுக்கப்பட வேண்டும் என்று அரசைக் கோருவதெனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(மா)

## பஸ் சேவை பாதிப்பு

[நெடுந்தீவு]

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சீர்கேட்டினல் நெடுந்தீவு மேற்குப் பகுதி மக்கள் மிகவும் கஷ்டமுறுகின்றார்கள். போக்குவரத்தில் பின்தங்கியுள்ள இப்பகுதிக்கு ஒரே ஒருபஸ் மட்டுமே சேவை ஆற்றி வருகிறது.

அடிக்கடி பழுதடைந்து வரும் இப்பஸ்ஸினல் பலரும் கஷ்டமடைகின்றார்கள்.

## கணவன் பிள்ளைகளை அடிப்பதை பொறுக்காத மனைவி தற்கொலை!

(கிளிநொச்சி)

'பிள்ளைகளுக்கு அடிக்காதே பெத்தமனம் பொறுக்காது' என கணவனுக்கு புத்திமதி கூறிய மனைவி நஞ்சருந்தி மரணமானர்.

பரந்தனில் வசித்துவந்த சங்கரலிங்கம் இந்திரா (22 வயது) என்பவரே மரணமானவராவார். இம்மரணம் தொடர்பான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரண விசாரணை அதிகாரி மு. யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சி ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவைச் சேர்ந்த என். இராசசேகரம் ஆஜர்செய்தார்.

மரணமானவரின் கணவன் கூலித்தொழிலாளி. வேலைக்கு சென்று வீடு திரும்பும்போது பிள்ளைகள் தொல்லைகொடுப்பதால் அவர்களை அடிப்பது வழக்கமாகும். கணவன்பிள்ளைகளை அடிப்பதை மனைவி பொறுக்காது புத்திமதிகூறினர் எனவும் பின்னரும் பிள்ளைகளை அடிக்கவே ஆத்திரம் கொண்டு நஞ்சை அருந்தி மரணமானர் என்றும் மரண விசாரணையில் அளிக்கப்பட்ட சாட்சியங்களில்இருந்து தெரிய வந்தது.

மரணமான இந்திராவின் கணவன் சு, சங்கரலிங்கம் சகோதரி சி. கமலேஸ்வரி ஆகியோரும் சட்சியமளித்ததைத் தொடர்ந்து தற்கொலை என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினர்.

## தையல் பயிற்சி நிலையம்

(புலோலி)


தொண்டமானறு கிராம மாதர்களின் நன்மை கருதித் தொண்டமானற்றில் தையல் பயிற்சி நிலையமொன்றை அமைத்துத் தருமாறு தொண்டமானறு கிராம அபிவிருத்திச் சங்கம், கிராம அபிவிருத்தி அமைச்சர் திருமதி விமலா கன்னங்கராவைக் கேட்டுள்ளது.

(7-ம் பக்கம் பார்க்க)

பூபாலசிங்கம் புத்தகசாலையின்
மாபெரும்
புத்தகக் கண்காட்சி
நல்லூர் கந்தனின் திருவிழாவை முன்னிட்டு
நல்லூர் சிவன்கோவிலுக்கு
அருகாமையில் எமது புத்தகக் கண்காட்சிச் சாலையில்
குறிப்பாக
சமய, சங்கீத, சோதிட, அரசியல்,
விஞ்ஞான, மருத்துவ நூல்கள்
உட்பட
சிறுவர்களுக்கான நூல்களையும்
தெரிவு செய்துகொள்ளலாம்.
அறிவியல் உலகிற்கு
இது ஒரு அரிய சந்தர்ப்பம்
தவருது எமது கண்காட்சிக்கு வருகை தாரீர்.
பூபாலசிங்கம் புத்தகசாலை,
(நல்லூர் சிவன் கோவில் அருகாமையில்)
நல்லூர், யாழ்ப்பாணம்.
(1375)

## நினைவஞ்சலி

செல்வன் மணிவாசகம்
(நெடுந்தீவு)



மலர்வு: 1962 02-13
உதிர்வு: 1984 07-18

பாசத்தின்
பிறப்பிடமே
பண்பிற்கோர்
ஒளிவிளக்கே
நம்மை
ஆறுத்துயரில்
ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்ட
வாசனே உன்
ஆத்மா சாந்தியடைய
வேண்டுகிறோம்.

திருமதி A. குமாரசாமி குடும்பத்தினரும்
நண்பர்களும்
34, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (1392)

ஷப்ரு அறிவித்தல்
7/8/84ந் திகதிக்கு பின்னர் மாதாந்த வட்டி பெறுவதற்கு உரிமையுடையவர்கள் பணத்தை தகுந்த ஆதாரங்களுடன் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஷப்ரு யுனிக்கோ
பினன்ஸ் லிமிட்டெட்
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 22073

யந்திர வகைகள்
குத்தகைக்கு வேண்டுமா?
இரும்பு கடைச்சல் யந்திரம் — மர கடைச்சல் யந்திரம் (LATHE), அச்சுயந்திரம் — புதிய போக்குவரத்து வாகனங்கள் — சலவைச் சாதனங்கள் — வைத்திய சாதனங்கள் — மேலும் கைத்தொழிலுக்குத் தேவையான சாதனங்கள்.
★ சொத்துக்களை நிரந்தரமாக்கிக்கொள்ள குத்தகை உன்னத வழி. அத்துடன் உங்கள் தொழிலை விருத்தியடையச் செய்ய உங்கள் நடைமுறை மூலதனம் உதவுகிறது.
★ 100% வருமான வரிச்சலுகையை உறுதிப்படுத்துவது குத்தகையே!
★ குத்தகை — உங்கள் வருமானத்தை விருத்தியடையச் செய்யும். இதனல் உங்களுக்குத் தேவையில்லாத பழைய யந்திரங்களை தவிர்த்துக்கொள்ளலாம்.
TFC
த பினன்ஸ்
கொம்பனி லிமிட்.,
249, மின்சார வீதி,
யாழ்ப்பாணம்.
டெலிபோன்: 23680

# தென்னுபிரிக்க பொதுத்தேர்தல்: ஐ. நா. சபை நிராகரிப்பு!

## கறுப்பர்களைப் பிரதிநிதித்துவப்படுத்த பாராளுமன்றில் 3 சபைகள்!

ஐ. நா. ஆகஸ்ட் 19 தென்னுபிரிக்காவில் இடம்பெறவுள்ள பொதுத்தேர்தலை ஐக்கிய நாடுகள் சபை நிராகரித்துள்ளது. அத்தேர்தல் தென்னுபிரிக்காவின் வெள்ளையர் ஆட்சியின் அரசியல் அமைப்புக்கமைய பாராளுமன்றில் மூன்று புதிய சபைகளுடன் நடத்தப்படவிருக்கின்றது. இம் மூன்று சபைகளும் அங்கு இன ஒடுக்கல்களுக்குள்ளான கறுப்பர் இனத்தவரை பிரதிநிதித்துவப்படுத்தும்வகையில் உருவாக்கப்பட்டுள்ளன.

தென்னுபிரிக்க கறுப்பர்களின் உரிமைகளை மேலும் பறிப்பதுடன், அவர்களின் விடுதலைப் போராட்டத்தைத் தடுப்பதே இம் மூன்று சபைகளும் உருவாக்கப்பட்டதன் நோக்கம் என்று ஐ. நா. வில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து தென்னுபிரிக்க தேர்தலை நிராகரிக்கும் பிரேரணையொன்று சபையில் கொண்டுவரப்பட்டது. இப் பிரேரணை 13—0 என்ற ரீதியில் வெற்றிபெற்றது. பிரிட்டனும், அமெரிக்காவும் இவ் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

அணிசேரா நாடுகளின் தலைவி என்றமுறையில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தென்னுபிரிக்க பொதுத்தேர்தலை கடுமையாக ஆட்சேபித்துள்ளார்.

''இனஒடுக்கல்களுக்குள்ளாகியுள்ள தென்னுபிரிக்க கறுப்பின மக்களை மேலும் ஒடுக்குவதுடன், அவர்களது விடுதலை உணர்வை மங்கச் செய்யும் ஒரு யுக்தியே தென்னுபிரிக்க அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்டுள்ள மூன்று சபைகளுமாகும். இச்சபைகள் மூலமாக கறுப்பினத்தவர் மத்தியில் தென்னுபிரிக்க வெள்ளையர் அரசு பிரிவினையை ஏற்படுத்த முயற்சிக்கிறது'' என்று அவர் தெரிவித்துள்ளார்.

தென்னுபிரிக்காவிலுள்ள ஆசிய நாட்டவர்களையும், பெரும்பான்மை கறுப்பர் இன மக்களையும் இத் தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படியும் திருமதி காந்தி மேலும் கேட்டுள்ளார். (கி)

## நிவாரண உதவி ஆயர் இல்லத்திலும் கையளிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் இடம் பெற்ற சம்பவங்களினுல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி வழங்குவதில் யாழ். ஆயர் இல்லமும் முன்வந்துள்ளது.

பொது மக்கள் பகிர்ந்தளிக்க விரும்பும் உணவு, உடை பணம் உட்பட வேறு பொருள்கள் ஆகியவற்றை யாழ் ஆயர் இல்லம், மனித முன்னேற்ற நிலையத்தில் அன்பளிப்பாக வழங்கும்படி நிலைய இயக்குநர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (மா)

## ஆந்திராவில் கலவரம்

## உயிரிழந்தவர்கள் குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் நஷ்டஈடு!

ஹைதராபாத், ஆகஸ்ட் 19 ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து ஆந்திரமாநிலத்தில் பொலிஸாரால் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்குத் தலா ஐயாயிரம் ரூபா நஷ்டஈடு வழங்கப்படும் என்று புதிய முதலமைச்சர் திரு. பாஸ்கரராவ் அறிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை ஆந்திராவில் திரு. என். டி. ராமராவ் பதவிநீக்கஞ்செய்யப்பட்டதைத் தொடர்ந்து 15 பேர் பொலிஸாரினுல் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர்கள் இம் மாநிலத்தின் பல்வேறு இடங்களிலும் வன்முறைகளில் ஈடுபட்டனர் என்று கூறப்பட்டது.

ஆந்திராவில் தற்போது நிலைமை கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப் பட்டிருப்பதாக கூறப்பட்டது. புதுடில்லியில் இருந்து மத்திய ரிசேர்வ் பொலிஸ்படையின் சில பிரிவுகள் ஆந்திராவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை திரு. என். டி. ராமராவின் தெலுங்குதேசம் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் இந்திய ஜனுதிபதியிடம் ஆந்திர ஆட்சி மாற்றம் குறித்து தமது எதிர்ப்பைத் நேரடியாகத் தெரிவிக்கப் புதுடில்லி சென்றுள்ளனர். [கி]

## பாவனைப் பொருட்கள் தட்டுப்பாடு

[பண்டத்தரிப்பு]

வலிமேற்குப்பகுதியில் அத்தியாவசிய பாவனைப்பொருட்களான மா. சீனி, மண்ணெண்ணை ஆகியவற்றிற்கு பெரும் தட்டுப்பாடு நிலவிவருகின்றது.

இப்பகுதியிலுள்ள பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் ஒன்றில் கடந்த வாரம் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் காரணமாக மேற்படி பொருட்களின் விநியோகத்திலும், கொள்வனவிலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதனுல் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## பிலிப்பைன்ஸில் மாபெரும் அரச எதிர்ப்பு ஊர்வலம்!

### உயர் நீதிமன்றம் அனுமதியளித்தது!

மணிலா. ஆகஸ்ட். 19 பிலிப்பைன்ஸில் அரசுக்கெதிரான மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்த உயர்நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அக்கினே கொலை செய்யப்பட்டு ஓராண்டுபூர்த்தியாவதை முன்னிட்டே அவரின் ஆதரவாளர்கள் அரசுக்கெதிராக மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

இந்த ஊர்வலத்தைத் தடை செய்யும்படி பிலிப்பைன்ஸ் உயர் நீதிமன்றில் நீதியமைச்சு வழக்கொன்றை அவசரமாகத் தாக்கல்செய்திருந்தது. இவ்வழக்குமீது 3 — 1 என்ற ரீதியில் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்து ஊர்வலத்தை நடத்த அனுமதியளித்தது.

சுமார் 10 லட்சம் பேர் மணிலாவின் நான்கு முக்கிய இடங்களிலிருந்து இப்பிரமாண்டமான ஊர்வலத்தை நடத்தவுள்ளனர்,

உயர்நீதிமன்றம் ஊர்வலத்துக்கு அனுமதியளித்துள்ள அதேவேளை அதனை கலவரங்களுக்கும், வன்முறைகளுக்கும் இடமின்றி நடத்தவேண்டும் எனப் பணித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் அரசாங்கம் இந்தஊர்வலம்குறித்துகருத்து வெளியிடுகையில் 'கம்யூனிஸ்ட்டுகளின் தூண்டுதலே இந்த ஊர்வல ஏற்பாடுகள்'' என்று கூறியுள்ளது. (கி)

## மனுதாருக்கு சேவைக்கால பணம் வழங்க தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

சேவைக்காலப் பணத்தைப் பெற்றுத்தரும்படி தாக்கல் செய்த வழக்கில், ஒவ்வொரு வருட சேவைக் காலத்திற்கும் அரை மாத வேதனமாகச் சேவைக்காலக் கொடுப்பனவை மனுதாரருக்குக்கொடுக்கவேண்டுமென்று சாவகச்சேரியிலுள்ள தொழில் நியாய மன்றுத் தலைவர் திரு. எஸ். என். குருசாமி தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கைத் தெல்லிப்பளையைச் சேர்ந்த திரு. பி. பேரம்பலம், ஸ்ரீலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு எதிராகத் தாக்கல் செய்திருந்தார்.

மனுதாரர் சார்பில் திரு. யோகராசாவும். பிரதிவாதி **சார்பில் திரு. வல்லிபுரமும்** ஆஜராஞர்கள.

மனுதாரர் 1949-ம் ஆண்டு வேலையில் சேர்ந்ததாகவும், 60 வயதுவரைக்கும் வேலையில் இருந்ததாகவும், மனுதாரர் சேவைக்காலத்தில் பலவிதமான வேதனம் அல்லாத சலுகைக்கு கொடுப்பனவுகளைப் பெற்றிருந்தார் என்றும், தெரிவித்த பிரதிவாதி, கூட்டுத்தாபனம் சேவைக்காலகொடுப்பனவு வழங்க மறுப்புத்தெரிவித்தது.

தொழிலாளர் ஒய்வுபெறும் போது சட்டரீதியாக அவர்களுக்குச் சேவைக்காலப் பணம் கொடுப்பதற்குச் சட்ட நிர்ணயம் உண்டென்றும், மனுதாரருக்கு, இதனை மறுப்பது ஒப்பரவுக் கோட்பாட்டுக்கு இயற்கை நிதிக்கு முரணுனதாக இருக்கும் என்பதை முடிவாகக்கொண்டு மனுதாரருக்கு 11,880 ரூபா வழங்கும்படி நீதவான் தீர்ப்பளித்தார். (க)

## சர்வோதய திட்டத்தின் கீழ் உதவி

[வண்ணார்பண்ணை]

யாழ் மாவட்டத்தில் உள்ள பின்தங்கிய பகுதிகளில் வசதிகள் குறைந்து இயங்கும் சனசமூக நிலையங்களுக்கு சர்வோதய உதவித் திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியம் எடுத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி, முன்னேற்ற உதவிகள் செய்வதற்கென யாழ். மாவட்டத்தில் உள்ள பதினுறு சனசமூக நிலையங்களை இச்சமாசம் தெரிவுசெய்துள்ளதாகவும் இவற்றின் பெயர்ப்பட்டியல்களை யாழ். பிரதேச சர்வோதய அமைப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும் சனசமூக நிலையங்களின் சமாசச் செயலாளர் திரு. எஸ். எஸ். வரதராஜா தெரிவித்தார்.

## பாகிஸ்தான் பிரதேசத்தில் 3-வது தடவையாக ஆப்கானிஸ்தான் தாக்குதல்!

### 'ஏரோ புளொட்' மீதும் குண்டு வீச்சு

இஸ்லாமாபாத், ஆக 19 ஆப்கானிஸ்தானின் எல்லைப் பகுதியில்அமைந்துள்ள பாகிஸ்தான்கிராமமொன்றில் நேற்று ஆப்கானிஸ்தான் பீரங்கிப் படைகளும், சில விமானங்களும் தாக்குதலொன்றை நடத்தின. இதில் குடியிருப்புப் பிரதேசமொன்று பாதிப்புக்குள்ளானது. இருவர் கொல்லப்பட்டனர்

இத்தாக்குதல் பாகிஸ்தான் பிரதேசத்தில் இடம்பெற்ற மூன்ருவது தாக்குதல் என்று கூறப்பட்டது. முதலிரண்டு தாக்குதல்களிலும் பதினைந்து பேர் கொல்லப்பட்டதுடன் பல குடியிருப்புக்களும் சேதமாக்கப்பட்டன.

பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு இஸ்லாமாபாத்திலுள்ள ஆப்கான் தூதுவரை அழைத்து இத்தாக்குதல்கள் குறித்து கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. இவற்றின் எதிர் விளைவுகளுக்கு ஆப்கானிஸ்தான் அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டுமெனவும் அது தெரிவித்துள்ளது.

இதேவேளை கராச்சியிலுள்ள சோவியத் யூனியன் 'ஏரோர் புளொட்' விமானச்சேவை காரியாலயத்தில் குண்டுவெடிப்பொன்று நிகழ்ந்தது. இரு பொலிஸ்காரர்கள் இதில் காயமடைந்தனர் கட்டிடம் சேதமடைந்தது. (கி)

## அகதி முகாம் மூடப்படும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சத்துருகொண்டான் கைத்தொழிற் பேட்டைகட்டிடத்தில் இயங்கி வரும் அகதிகள் முகாம் இம் மாதத்துடன் மூடப்படவுள்ளதாக மாவட்ட பிரதிசமூக சேவைப் பணிப்பாளர் திரு. எப். ஏ. மத்தியாஸ் தெரிவித்தார்.

## அடுத்த ஆண்டு இளைஞருக்கு

(யாழ்ப்பாணம்)

1985ம் ஆண்டு சர்வதேச இளைஞர் ஆண்டாகப் பிரகடனப் படுத்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. [மா]

## மட்டுநகர் வருவர்

(மட்டக்களப்பு)

யாழ். முல்லைத்தீவு மாவட்டங்களை போன்று மட்டக்களப்பு மாவட்டத்திலும் தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்கஅமைப்பு முறை விஸ்தரிப்பு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு பனப் பொருள் அபிவிருத்தி சபைத்தலைவர் திரு கே. நடராசா, பனம் பொருள் நிபுணர் திரு. கே. சம்பந்தப் ஆகியோர் இம்மாத இறுதியில் மட்டக்களப்பு வருகை தருகிருர்கள்.

## மணிவாக்கு

துன்பம் உன்னைத் தாக்கும்பொழுது அது எல்லாரையும் தாக்குகிறது என்று நினை. யாரும் அதினின்று தப்ப முடியாது. வருத்தப்படுகிறவனுக்கே பிறர்பால் அனுதாபம் உண்டாகிறது.

— அருள்விருந்து

# நமது நோக்கு

## இன ஒதுக்கலுக்கு ஒரு புது வேடம்

சூரபன்மன் சுப்பிரமணியரை எவ்வகையிலும் வென்றுவிடலாமென்று போராடினன். தோல்விக்குப் பின் தோல்வியென்ருலும் அவனுடைய அகங்காரம் இலகுவில் குறையவில்லை. ஈற்றில் மாமரமாய் வந்ததை 'சூரன்போர்' திருவிழாவில் நாம் பார்க்கின்ரேம்.

மிகப்பிரயோசனமான வடிவம் அது; இன்று யாழ்ப்பாணத்தில் மாம்பழம் விற்கும் விலையைக் கணிப்பதானல் மனிதனிலும் பார்க்க மாமரம் மிக மதிப்பான பிறவி.

ஆனல் எந்தக் கட்டத்திலும் சுப்பிரமணியர் ஏமாறவில்லை. அவருடைய வேல் (மந்திரமல்ல) மாங்காய் பிடுங்கிற்று. ஏமாற்ற முயன்ற சூரபன்மன் தோல்வியில் உண்மைச் சங்கதியை உள்ளவாறு வெளியிடுகின்ருன்.

மயில்வாகனத்தின் மீது ஏறிவரும் குமரனை ஒரு பாலன் என்று தவருக எண்ணிவிட்டான்; இவ்வித வீரம் படைத்த பேர்வழியென்பதை அவரின் அற்புதச் செயல்களால் அநுமானித்து அடிபணிந்து அர்ச்சிக்கின்ருன்.

கறுத்தவர்கள், நிறத்தவர்கள் ஆசிய ஆபிரிக்கக் கண்டத்தவர் பிறப்பிலேயே குறைந்தவர்கள் என்ற எண்ணம், சூரபன்மனின் மாயாசாலங்கள், போலி வெற்றிகள் போல் இன்றும் உலகில் நிலவுகின்றது.

தென்ஆபிரிக்காவின் இன ஒதுக்கல் என்ற அசுரக் கொள்கையை உலகில் பல நாடுகள் — இலங்கை உட்பட — கண்டித்து வருகின்றன.

ஆனல் வெள்ளையரின் வெறிகொண்டஆட்சி தென் ஆபிரிக்காவில் கறுத்தவரை தமது சொந்த நாட்டில் ஒதுக்கிவைக்கும் திமிரில் கொஞ்சமும் நெகிழவில்லைப் போல் தெரிகிறது.

பழைய பிடிபிடிக்க முடியாதபோதும், அவர்கள் இரண்டரைக்கோடி கறுத்த மக்களுக்கு தங்கள் தாய் நாட்டில் அரசியல் அதிகாரம் எதுவுமில்லாதவாறு அரசியல் சாசனம் அமைத்து வருகின்றனா.

நிலைமையில் சிறுமாற்றங்கள் ஏற்பட்டபோதும் 'இனத்துவேஷம்' வெள்ளையரின் நெஞ்சத்தில் குடிகொண்டிருப்பதால், தென் ஆபிரிக்காவிற்கு உருவாக்கப்பட்ட புதிய அரசியல் அமைப்பு, ஜனநாயக, இன வேற்றுமையற்ற ஆட்சியை நிறுவுதற்கு உதவாது.

இந்த அபிப்பிராயம் ஆபிரிக்க நாடுகள் ஐம்பது கொண்ட சம்மேளனத்தால் வெளியிடப் பட்டிருக்கிறது.

ஆபிரிக்க, ஆசிய நாடுகள் பல இதனைக் கண்டித்து கடினமாக எதிர்த்து ஐ.நா, பாதுகாப்புச் சபைக்கு குரல் எழுப்பியிருக்கின்றன.

செப்டம்பர் மாதம் 3ம் தேதி இந்தப் புதிய சாசனம் ஏற்றுக்கொள்ளப்படவிருப்பதால், இதனைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்பதே ஐ. நா. விவாதத்தின் நோக்கமாகும்.

இனத்துவேஷம் வடிவெடுத்தாற்போல் தொழிற்படும் தென்ஆபிரிக்க அவுணர்கோன் இது ஒரு உள்நாட்டுவிடயம்; 15 அங்கத்தவர்கொண்ட ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கும். இதற்கும் ஒரு தொடர்புமில்லை என்று வாதாடியிருக்கிருர்.

''உள்நாட்டு விடயம்'' என்பதின் அடி முடியை இன்று உணரவல்ல மூர்த்தி இந்தியாவென்பது எமது நம்பிக்கை. அது என்ன சொல்கிறது?

ஆபிரிக்க மக்கள் இந்தத் தேர்தலை பகிஷ்கரிக்கவேண்டும். இனஒதுக்கல், இனத்துவேஷம், இனப்பாகுபாடு, எந்தவிதத்திலும், எந்த வேடத்திலும் மனித நாகரிகத்துக்கு முரணனது; இவ்வித அட்டூழியமே மனிதாபிமானத்துக்கும், சர்வதேச சமாதானத்துக்கும் பேரெதிரியென்றுவெளுத்து வாங்கியிருக்கின்றது. பாரதம் ஒரு பாலனு?

101 நாடுகள் திரண்டிருக்கும் அணிசேரா இயக்கத்தின் தலைவர் இந்தியப் பிரதமர் இந்திரா; இந்தத் தோரணையில் அவருடைய சொல்செல்லுந்தன்மையது; அதனை அலட்சியம் செய்வது அபாயம்; தென்ஆபிரிக்காவிற்கு இன்றும் ஆதரவு-மறைமுகமாகத்தானும்- அளிக்கின்ற வெள்ளையர்கூட்டத்துக்கு பெரும் சவால் எழுப்பியிருக்கிருர் இந்திரா.

எங்கள் நாட்டுப் பிரச்னையை தென்ஆபிரிக்காவின் இனஒதுக்கலுக்கு ஒப்பிடுவது நியாயமாகாது.

இங்கு வாழும் மக்கள் இந் நாட்டவரே. அந்த உண்மையை மறைக்கவும் மறுக்கவும் சூழ்நிலை இடம் கொடுப்பதே எங்கள் துரதிர்ஷ்டம்; ஒரு சிறு புண் புற்றுநோயாக மாறும் ஆபத்து இருந்துவருகிறது.

பகைமைக்கு அண்ணன் அதிகாரமோகம்; அது தலைக்கேறினல் திக்குத் திசை தெரியாது திண்டாடும் நிலை ஏற்படுவது சகஜம்.

தென் ஆபிரிக்காவின் படிப்பினை எமக்கு உதவ வேண்டும். தடுக்கவல்ல நோயை முற்றவிடுவது உயிருக்கே அபாயம்.

## ஸ்ரீ வரதராஜர் தேர்

(சுழிபுரம்)

கிருஷ்ணஜயந்தி தினமாகிய இன்று பொன்னலை ஸ்ரீ வரதராஜர் பொருமான் கோவிவில் தேர்த்திருவிழாவும் உறியடி உற்சவமும் நிகழும். நாளை காலை திருவடி நிலையில் தீர்த்தத்திருவிழாவும் மாலை துவஜஅவரோகமும் நிகழும் நாளை மறு நாள்புதன் கிழமை பகல் சங்காபிஷேகமும் மாலை திருக்கலியாண விழா நிகழும். திருக்கலியாணத் திருவிழாவின் போது பொன்னலை சித்திவிநாயகர் கோவிலிருந்து பெருமாள் மணவாளக் கோலத்துடன் பூந்தண்டிகையில் உலாவவருவார்.

(ப)

# இரத்தம்: உயிர்காக்கும் அதிசய சக்தி!

## துடிக்கும் உயிரைக் காத்திடவாரீர்!

வைத்திய கலாநிதி செல்வி வை. ஆறுமுகம்
இரத்த வங்கி, யாழ். ஆஸ்பத்திரி

அரிது அரிது மானிடராதல் அதனிலும் அரிது தியாகிகளாதல்.

தியாகசிந்தை எவர்க்கும் எளிதில் அமைவதொன்றல்ல.

மக்களாகப் பிறந்தவர் அனைவரும் மகிழ்வுடன் நெடுங்காலம் வாழவே விரும்புவர், நெடுநாள் வாழ்வு நிலைபெற்று விளங்க உடலுடன் உயிரை பிணைத்து வைப்பது இரத்தமென்ற உயிர்த்திரவமே. உடல் வளம் பெற்ற மக்கள் அனைவரும்உளவளமும் பெற்று உயர்ந்தவர்களாக உயிர்காக்கும் தர்ம சிந்தனை உடையவராக - தம்மிடம் இருக்கும் வற்ருத ஜீவநதியாகிய உத்ரதினை உயிர்காக்க வழங்கத் தயங்காதவர்களாக இருப்பார்களாயின் அவர்களே உலகில் உயர்ந்த உள்ளம் படைத்த தியாகிகளாவர். உங்கள் உடலில் நாள்தோறும் ஊறிவரும் உதிரத்தால் அபாயநிலையில் உள்ள ஒருயிரை இவ்வுலகில் வாழ வைக்கும் பேருதவியை செய்வீர்களாயின் உங்களையே தமது உயிர் காத்த தெய்வமெனப் போற்றுவர்.

இரத்தமானது இருதயம் மகாநாடிகள், காரிரத்தநாடி, நாளங்கள், சிறு நாடிகள் ஊடாக ஓடிக்கொண்டிருக்கும் ஒரு திரவமாகும். இரத்தச் சுற்ருேட்டத்தின் மூலமே உடலில் ஒவ்வொரு அணுவுக்கும் பிராணவாயுவும் உணவுப் பொருட்களும் கொண்டு செல்லப்படுவதுடன் உடலிலிருந்து கழிவுப் பொருட்கள் சிறுநீரகம், சுவாசப்பைகள் மூலம் வெளியேற்றப்படுகின்றன.

ஒரு கன மில்லி மீற்றர் இரத்தத்தில் 5,000,000 செவ்வணக்களும், 8,000 வெள்ளை அணுக்களும் 200,000 இலிருந்து 5,000,000 வரை சிறு தகடு போன்ற அணுக்களும் காணப்படுகின்றன. இருப்புச் சத்துள்ள 'ஹீமோகுளோபின்' செவ்வணக்களில் காணப்பட்டு இரத்தத்திற்குச் செந்நிறத்தைக் கொடுக்கின்றது.

சாதாரணமாக 60 கிலோ நிறையுள்ள மனிதனில் 10-12 பைந்து இரத்தம் இருக்கும் இந்த இரத்தமானது நாம் உண்ணும் உணவின் மூலம் புதிது புதிதாகத் தோன்றி வருவதோர் திரவ பதார்த்தமாகும். ஒரு செவ்வணுவின் வாழ்க்கைக் காலம் 120 நாட்கள் ஆகும். அதன் முடிவடைந்த பின் அது உடைக்கப்பட்டு மீண்டும் புதிய செவ்வணு உண்டு பண்ணுகிறது. எனவே இரத்த தானம் செய்யும் போது அழியப் போகும் ஒரு பகுதி இரத்தத்தையே ஒரு அவசர நோயாளிகளுக்குக் கொடுக்கின்றீர்கள்.

(5-ம் பக்கம் பார்க்க)

யாழ். வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள்

### ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி உற்சவம்

### வரதராஜப் பெருமாளே!

யாழ்சேர்ந்த வண்ணைஸ்ரீ வெங்கடேசன் வரத
ராஜப் பெருமாளே! ரட்சிப்பாய் — வாழ்வுகெட்டு
வாடி வதங்கி வாட்டமுறும் மக்களைநீ
நாடி அருள்புரிவாய் நன்கு

— முருகசூரியன்

# மக்கள் கருத்து

## இதுதான் கதியா?

தமிழ் மக்கள் வாழும்பகுதியில் ஏதாவது தொழில்செய்து பிழைக்கலாம் என்று என் குடும்பத்தாருடன் வந்து இணுவிலில்வாடகைக்குவீடு எடுத்து வசித்துவருகிறேன். கடந்த 18-4-84 அன்று இணுவில் ஆஸ்பத்திரிக்கருகாமையில் என்னைக் கார் ஒன்று மோதியது. பலத்த காயமுற்றநான் பல நாட்கள் ஆஸ்பத்திரியில் இருந்தும் சரியான சுகமின்றியே கஷ்டமுறுகின்றேன். சாப்பாட்டுக்கும் வழியின்றி பெருங்கஷ்டத்துக்குள்ளாகியுள்ள என்னிடமிருந்து நஷ்ட ஈடுகோரி என்னை மோதியகாரின் உரிமையாளர் கடிதம்எழுதியுள்ளார். நான் என்னசெய்வது?

அமைச்சர் தொண்டமான் அவர்களுக்கு என்நிலைபற்றி எழுதினேன் அவர்நடவடிக்கை எடுப்பதாக கூறி கடிதம்எழுதியுள்ளார். ஆனல் எதுவிதமுன்னேற்றமும் இல்லை. பொலிசாரும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

என் போன்ற ஏழைகளுக்கு இதுதான் கதியா?

பெ. சிவலிங்கம்
வட்டுவினி
இணுவில் மேற்கு

(இன்று நல்லூர்க்கந்தன் 19-ம் திருவிழா)

## கந்தனே! அருளல் வேண்டும்!!

எங்களைத் தினம் வருத்தும்
துயரெலாம் தொலைய வேண்டும்!
எங்களை நிதம் உழற்றும்
பிணியெலாம் மறைய வேண்டும்!
எங்களைத் தினம் உறுத்தும்
இடரெலாம் ஒழிய வேண்டும்!
எங்களை ஆளும் நல்லைக்
கந்தனே! அருளல் வேண்டும்!!

வேண்டிடும் அமைதி யெங்கும்
வளர்ந்திடக் கருணை செய்வாய்!
வேண்டிடும் வளங்க ளெல்லாம்
மலிந்திட அருளைச் செய்வாய்!!
வேண்டிடும் உரிமை யெல்லாம்
மலர்ந்திடக் கருணை செய்வாய்!
வேண்டுவ துன்னை யல்லால்
ஈண்டெமக் கெவரு மில்லை!!

பார்த்தனுக் குறுதி சொன்ன
மாதவன் மருகா! கந்தா!!
பார்த்தொரு முறுவல் செய்வாய்!
வாட்டிடும்பிணிகள் போகும்!!
ஆர்த்தெழும் இடர்கள் எல்லாம்
பரிதிமுன் பனிப்போ லாகும!
பார்த்தின்னும் இருத்தல் வேண்டாம்!
கார்த்திகைக் குமரா! காப்பாய்!!

— ச. முருகையா

○ ○ ○

## வழிக்குத் துணையாக வா முருகா

நல்லை நகர்க் காவலனே
நானி லத்தின் நாயகனே
சொல்லு தமிழ்த் தூயவனே
சோதி வடி வானவனே
தொல்லை தனி லகப்பட்டுத்
துரும் பாக வலைகின்றேன்
வல் இ தோப தேசஞ்செய்ய
வழித் துணை யாகவாவா

நின்ப திக்கு வருகின்றேன்
நிழல் தேடி விரைகின்றேன்
என்குறை யார்க் குரைப்பேன்
எனக் குதவ எவருமில்லை
செல்வக் குமரா சேந்தா
சீர்மலி தேவியர் சகிதம்
செல்லும் நீள் வழிதனிலே
தோன்ருத் துணை யாக வா

— மணிமன்றன்

# அமைதி, நீதியை நிலைநாட்ட

## ஐக்கிய சர்வமத ஸ்தாபனம் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் நல்லுறவையும் அமைதியையும் நீதியையும் நிலைநாட்டும் வகையில் மத்தியஸ்தம் வகித்துச்செயல்படுவதற்கு ஐக்கிய சர்வமத ஸ்தாபனம் முன்வந்திருக்கின்றது.

இந்த ஸ்தாபனத்தின் பொதுச்செயலாளர் வண கலாநிதி வல்பொல ஸ்ரீராகுல வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இக்கருத்தைவெளியிட்டிருக்கின்றார்.

''தீவிரவாத இளைஞர்களைத் தமது தாக்குதல் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தும்படி கேட்டுக் கொள்கின்றோம் அதேசமயம் ஆயுதப்படைகளும் பொலிசாரும் இவ்விளைஞர்கள் தம் நடவடிக்கைகளை நிறுத்தியிருக்கும் சமயத்தில் அவர்களுக்கெதிராக நடவடிக்கையில் இறங்கவேண்டாம் என்றும் வலியுறுத்துகின்றோம்'' என்று ஸ்ரீராகுல அறிவித்துள்ளார்.

நீதியும் அமைதியும் நிலைநாட்டப்படுவதற்கான பேச்சுவார்த்தைமூலம் தீர்வுகாணும் முயற்சியில் நல்லெண்ணம் படைத்த அனைவரையும் ஈடுபடும்படியும் அவ்வறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

# இரத்த...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

உங்கள் உடலில் என்றும் ஓடிக் கொண்டிருக்கும் உதிரத்தில் ஒரு சிறுபகுதியை உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருக்கும் உங்கள்சகோதர சகோதரிகளின்உயிரைஉடலுடன்ஒட்ட வைக்க உதவுங்கள். ஒருவர் பெரிய விபத்தினுல் இரத்தமிழந்திருந்தால், அல்லது பிரவசத்தின் போது அதிக இரத்தப் போக்கினுல் இரத்தமிழந்திருந்தால், கற்பச்சிதைவின் பின் இரத்தம் இழந்திருந்தால் நெருப்புக் காயங்களின்பின் அதிக ஊனம் வடிந்திருந்தால், சத்திரசிகிச்சையின் போது இரத்தம தேவைப்பட்டால், இரத்தச் சோகையினுல் ஏற்படும் இரத்தக் குறைவை நிவர்த்திக்க இரத்தம் அவர்களுக்கு வழங்க வேண்டிய நிலை இருக்கும். இவ்வாறு அவர்கள் இழந்த இரத்தத்தை ஈடு செய்ய இரத்தத்தையே அளிக்க வேண்டும். இந்நிலையில் இரத்தம் அளிப்பதே தனிச்சிகிச்சை, உயிர் கொடுக்கும் சிகிச்சையும் இதுவே ஆகும்.

எனவே, 18 — 50 வயதிற்கு இடைப்பட்ட கஷயரோகம், நெருப்புக் காய்ச்சல், செங்கமாரி, மலேரியா, மேகரோகம் போன்ற நோய்களாற் பீடிக்கப்படாத தேகாரோக்கியமுள்ள ஆண், பெண் அனைவரும் இரத்ததானம் செய்யலாம் நீங்கள் மனமுவந்து அளிக்கும் இரத்ததானம் மற்ருேருயிரைக் காக்கும் மருந்து. இரத்தத்தைத் தானம் செய்வதனுல் உங்களுக்கு யாதொரு தீங்கும் ஏற்படாது என்பது முழுவதும் உண்மை. நீங்கள் தானமாக அளித்த இரத்தத்திற்குப் பதிலாகப் புதிய இரத்தத்தை உண்டு பண்ணிக் கொள்வதுடன் இரத்தத்தை உண்டு பண்ணும் உறுப்புக்களுக்கும் அப்பியாசத்தை அளிப்பதனுல் உடலையும் சீர்ப்படுத்திக் கொள்வீர்கள்.

இரத்ததானம் செய்வதன் மூலம் நீங்கள் இழந்த இரத்தத்தை நீங்கள் உண்ணும் சாதாரண உணவின் மூலமே இரு வாரங்களில் மீண்டும் பெற்று விடுவீர்கள்.

இங்கு யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலைக்குத் தினமும் 20 போத்தல் இரத்தம் தேவைப்படுகிறது. நாள்தோறும் வைத்திய சாலைக்குத் தேவைப்படும். இரத்தத்தை ாம் எம்மக்களிடமிருந்தே பெறவேண்டி இருக்கின்றது. எனவே சுகதேகிகளாகிய நீங்கள் அளிக்கும் இரத்தத்தினுல் உயிர் பெற்று வாழத்துடிக்கும் நோயாளிகளுக்கு இதயம் உவந்து இரத்ததானம் வழங்குக. இரத்ததானம் செய்ய விரும்புவோர் யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்து காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை இரத்த தானம் செய்யலாம்.

அன்றேல் 25 பேருக்குக் குறையாத ஒரு குழுவினர் கூடி குறித்த ஒரு இடத்தில் இரத்ததானம் செய்ய விரும்பி இரத்தவங்கி வைத்திய அதிகாரிக்கு அறிவித்தால் அவர் அவ்விடத்திற்கு வந்து இரத்தத்தைப் பெற்றுக்கொள்வார்.

இரத்ததானம் செய்யும் ஒவ்வொருவருக்கும் ரூபா பத்து சன்மானம் உடனே அளிக்கப்படும்.

நீங்கள் இதய முவந்தளிக்கும் இரத்ததானம் இயமனுடன் போராடும் இளைஞன் ஒருவனை மீளவும் இவ்வுலகில்வாழவைக்கிறது. அவன் அன்னையின் மனத்தை மகிழச் செய்கிறது. கணவனின் உயிரைக்காப்பாற்றி மனைவிக்கு மாங்கல்யப் பிச்சையளிக்கிறது. அனுதையாகிவிடவிருந்த பிள்ளைக்குத் தாயை மீட்டுத் தருகிறது. எல்லாம் நீங்கள் வழங்கும் இரத்தத்தினுல்தான்.

எனவே உள்ளம் உவந்து உதிரம் கொடுத்து உலகினை வாழ வைப்பீர்களாக.


நொடிப்பொழுதில்

உலகம்

உங்கள் கையில்!

?

உலகின்
எந்த மூலையாவது
இருக்கட்டும்!

வெளிநாட்டிலிருக்கும்
உங்கள் இதயங்களின் குரலை
தனிமையில் அனுபவிக்க

யூனிவேர்சல்

ரெலெக்ஸ்

536 (288), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23100, 23006.


## சொந்த ஊரை மறக்காதவர்

சிங்கப்பூர் வாசியான அமரர் பொன்னையா இராஜரட்ணம் அவர்கள் நீரில் மூழ்கி 21.7.1984 ல் அகால மரணமடைந்தார். அன்னுரின் மரணம் சிங்கப்பூர் புறூணை மக்களுக்கு மட்டுமல்ல இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கும் ஓர் பேரிழப்பாகும்.

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த பொன்னையா தம்பதிகளின் புதல்வரான இவர் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஆரம்பக்கல்வி கற்ற பின் பத்து வயதில் சிங்கப்பூர் சென்ருர். அங்குதன் உயர்கல்வியை முடித்த பின் 1940ம் ஆண்டு பொலிஸ் சேவையில் சேர்ந்து திறமையாகப் பணியாற்றி 1969ம் ஆண்டில் சிங்கப்பூர் உதவி பொலிஸ் கமிஷன் பதவியை வகித்தார். 1971ல் பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின் புறூணையில் ஊழல் ஒழிப்புப் பணியகத்தில் பிரதம அதிகாரியாகப் பணியாற்றி 1982ல் ஓய்வு பெற்ருர்.

சிங்கப்பூர் பிரதம மந்திரி திரு.லீ.குவான் யீ அன்னுரது மரணம் குறித்து விடுத்த இரங்கலுரையில் அன்னுரது கடமையுணர்ச்சியையும் சேவைத் திறனையும் பெரிது பாரட்டியிருப்பது அன்னுரின் தொழிற்றிறனையும், ஆளுமையையும் எடுத்துக் காட்டுகிறது. பொலிஸ் சேவையிலும் ஊழல், ஒழிப்புப் பணியிலும் கடமை' கண்ணியம்' கட்டுப்பாட்டுடன் பணியாற்றினுர்.

தன் சிறுவயதில் வெளிநாடு சென்று உயர் பதவிகளை வகித்துப் பேரும், புகழும் பெற்ற போதும், தான் பிறந்த நாட்டையோ தன்னுட்டு மக்களையோ மறந்தாரல்லர் தமிழ் மக்களது, குறிப்பாக ஊரெழு உரும்பிராய் மக்களது முன்னேற்றத்தில் பெரும் ஈடுபாடு கொண்டவராக விளங்கினுர். அவர்களுக்கு வேண்டிய நேரங்களில் தக்க ஆலோசனைகளும், பணஉதவிகளும் வழங்குவதில் முன்னின்ருர். ஊரெழு பிள்ளையார் கோவிலுக்கு மின் இணைப்பு செய்துகொடுத்தார் இதே போன்று சமூக நல உணர்வுடன் பல கைங்கரியங்களை ஆற்றியுள்ளார்.

அன்னுரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக

வாமதேவா சண்முகம்

## பொன்னுலையில் கூர்மாவதார வரதராஜருக்குத் தேர்

காத்தல் கடவுளாகக் கலியுக வள்ளல் கண்ணபிரானுக்கு ஈழமணித்திருநாட்டில் திவ்விய சேஷ்த்திரங்கள் மூன்றுஉண்டு. இலங்கு சைவத் திருநகராம் யாழ்ப்பாணத்தின் கீழ்த்திசையில் மத்தியில் மேற்திசையில் என முறையே இத்தலங்கள் அமைந்துள்ளன. வல்லிபுரத்திலே வல்லிபுர ஆழ்வாராகவும், வண்ணுர்பண்ணையில் வெங்கடேஸ்வரர் ஆகவும் பொன்னுலையில் வரதராசர் ஆகவும் விளங்கும் கண்ணன் வல்லிபுரத்தில் சக்கரமாகவும், பொன்னுலையில் கூர்மமாகவும் அவதாரம் எடுத்தருளியுள்ளார். ஈரடியால் மூவுலகளந்த பெருமாள் ஆன்மாக்கள் உய்யும் வண்ணம் திருவடி வைத்த திருவடிநிலை என்னும் சமுத்திர தீர்த்த

ஆ. கனகசபை

மானது முத்து, சிப்பி, சங்கு முதலிய கடல்படு திரவியங்களுடன் பொன்னுலையில் வடக்கேயுள்ளது. பொன்னுமையாகத் திருவவதாரஞ் செய்து இலக்குமி மணுளரான திருமால் கல்லாமையாக அமர்ந்தவிடமே பொன்னுலையாகும். கலியுகவள்ளலாம் பார்த்தசாரதி பொன்னுலையில் நிகழ்த்தும் திருவிளையாடல் அற்புதமானது.

ஆவணித் திங்கள் அட்டமித் திதியில் ரோகிணி நன்நாளில் பொன்னுலை வந்து கூர்ம அவதாரப் பெருமாள் அருட்புதுமையை இங்கு கண்டு கண் குளிர்வோம். பொன்னுலையில் பொன்னுமை தோன்றி செய்த திருவிளையாடலின் தத்துவ விளக்கம் இக்கலியுகத்தில் காசே தான் கடவுள் என்று தேடி அலையும் மக்களுக்குச் சிறந்த உபதேசமாகவும் அமைகின்றது. பொன்னுலையிற் தோன்றிக் கல்லாமையான கண்ணன் ''மக்களே! பொய், களவு, கள், காமம், கொலை என்கிற பஞ்சமாபாதகங்கள் மீது உங்கள் புலன்கள் செல்லாமல், புலன் ஐந்தையும் உள்ளுக்கு இழுத்து மனதைக் கல்லாக்கவேண்டும்'' என உபதேசிப்பதாகக் கற்பனை பண்ணலாமன்ருே. ஏழுவீதிகள் கோபுரங்களுடன் குளக்கோட்டு மன்னன் திருப்பணி செய்த பொன்னுலையாப பூலோக வைகுந்தத்திற்கு செல்லுப்போது மனக் கண்ணுல் மணிவண்ணனின் ஏழுகோபுர வாயில்களையும் கண்டுகொள்ள வேண்டும. முதல்வாசலில் ஆதிகணேசர் ஆலயம் கொண்டருளி இருக்கின்ருர். மருதநிலத்தில் கோயில் கொண்டருளி இருக்கும் ஆனைமுகன் திருதெரிசனம் கண்டு செல்லும் அடியார்கள். பூலோக வைகுண்டத்தில் மணிவண்ணனின் தரிசனத்தை விக்கினமற்றதாக்குவார்கள்.

ஆலயத்தின் சமீபத்தை அடைந்தவுடன் வடதிசை நோக்கி அருள்பொழியும் நரசிம்ம ஞானவைரவரின் திருவருள் தரிசனம் கண்டு வணங்கலாம். பின்னர் வரதராசாவின் நாமபஜனையுடன் ஆலயத்தின் உட் சென்ருல் ஆன்மாக்கள் ஆனந்திக்கும்படி பச்சைமாமலை போலு மேனியைக் கண்டு தரிசிக்க வடக்கு வீதியில் அறிதுயில் கொள்ளும் அனந்தசயனகோலத்தைக் கண்டு ஆனந்திப்பவரும் குறையிரப்பவரும் அருள் பெறுபவருமாக ஆலயத்தில் அடியார் கூட்டம் தேர்த்திருவிழாவின்போது பொங்கிவழியும்.

விபீஷணர்-அநுமார்முதலிய தூய அன்பர்கள் மனிதக் கண்களுக்குப்புலப்படாமல் சூழ்ந்துவர மகாலட்சுமி பூலக்குமி சமேச வரதராஜப் பெருமள் தேருக்கு வரும் காட்சியையும் பெருமாளின் புன்முறுவலோடும் அபயகரத்தோடும் விளங்கும் அதிசயக் கோலத்தையும் காணக் கண்கோடி வேண்டும். இப்பெருமாளின் அளகிலும் அருளிலும் இன்புற்ற அன்பர் ஒருவர் துதித்தவாறு ''ஆருக்கும் பொன்னுலை ஆலயத்துள்ளவர் அதிசய அற்புதரே'' என்பதை ஒவ்வொருவரும் பிரத்தியட்சமாகத் தமது கண்ணே சாட்சியாகக் காண ஆவணி ரோகிணியும் அட்டமி திதியும் கூடும் கிருஷ்ணஜயந்தி தினமும் மிகப் பொருத்தமான நாளாகும். பெருமாள் தேரிலேறி வலம்வந்ததும் நநண்பகல் நடைபெறும் உறியடி உற்சவம் அடியார்களுக்கு கிருஷ்ணபால லீலைகளை நினைவு படுத்தும்.

## ''தலைமைத்துவ பயிற்சியை தே. இ. சே. மன்றம் வழங்குகிறது''

(கிளிநொச்சி]

''கிராமங்களில் வாழுகின்ற இளைஞர், யுவதிகள் மத்தியில் தலைமைத்துவத் திறனை வளர்த்து அவர்கள் மத்தியில் எழும் பிரச்னைகளுக்கு தாங்களாகவே ஒரு தீர்வை ஏற்படுத்தக்கூடிய பயிற்சிகளைத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வழங்குகின்றது. இது இளைய சந்ததியினருக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.''

இவ்வாறு இராமநாதபுரத்தில் தேசியஇளைஞர் சேவைகள் மன்றத்தினுல் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளின் பரிசளிப்புவைபவத்தில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் கிளிநொச்சிப்பகுதி தேசிய இளைஞர் சேவை மன்ற அதிகாரி திரு. கு. பரராசசேகரம் குறிப்பிட்டார்

இராமநாதபுரம் தேசியஇளைஞர் சேவைகள் மன்றத் தலைவி செல்வி. ரி. மனேன்மணி தலைமையில் இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் இவ்வைபவம் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி எஸ். தர்மசீலன் கலந்துகொண்டார் சிறப்பு விருந்தினர்களாக இளைஞர் கூட்டுறவு முகாமையாளர் திரு. சிவதட்சணுமூர்த்தி, பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். உருத்திரேஸ்வரன் ஆகியோர்கலந்துகொண்டனர்.

மன்றம் நடாத்திய வலைபந்தாட்டப் போட்டியில் இராமநாதபுரம் இ. சே. மன்றத்தை எதிர்த்துப் போட்டியிட்ட வட்டக்கச்சி இ. சே. மன்றம் வெற்றியீட்டியது. உதைபந்தாட்டப்போட்டியில் வட்டக்கச்சி இ. சே. மன்றத்தை எதிர்த்துப் போட்டியிட்ட இராமநாதபுரம் இ. சே. மன்றத்தினர் வெற்றியீட்டினர்.

இராமநாதபுரம் இளைஞர் சேவைகள் மன்ற செயலாளர் ரி. மகேந்திரராசா நன்றியுரை கூறினுர்.

## ''மக்களின் உடல்நலத்திற்கு ஊறுவிளைவிக்கும்

# கிருமிநாசினிகளைபாவிப்பதை

## விவசாயிகள் தவிர்க்கவேண்டும்''

(பண்டத்தரிப்பு)

''விவசாயிகள் தங்களின் உற்பத்திப்பொருட்களுக்கு கிருமிநாசினி தெளித்து ஒரு குறிப்பிட்ட நாட்கள் கடந்த பின்பே அவற்றை சந்தைக்கு விற்க கொண்டு செல்ல வேண்டும். மக்களின் உடல் நலத்திற்கு பாதகம் விளைவிக்கும் சக்தி வாய்ந்த நஞ்சு படைத்த கிருமிநாசினிகளை தங்கள் மரக்கறிப்பயிர் வகைகளுக்கு தெளிப்பதையும் விவசாயிகள் தவிர்க்க வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட பயிர்ப்பாதுகாப்பு உத்தியோகத்தர் திரு. பி. நடராசா பண்டத்தரிப்பு கீரிமலை வீதியில் நடைபெற்ற ''இன்றைய விவசாயிகள் பிரச்னைகள்'' பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். திரு. ச. நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பயிர்ப்பாதுகாப்பு உத்தியோகத்தர் திரு. நடராசா தொடர்ந்து உரையாற்றுகையில் ''விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் கத்தரி, மிளகாய், கோவா ஆகிய மரக்கறி வகைகளுக்கும், கீரைக்குக் கூட இன்று கிருமிநாசினிகளை அதிகளவில் பயன்படுத்தி வருகின்றார்கள். இவர்கள் மருந்தடித்துவிட்டு உடனடியாகஅவற்றைவிற்க சந்தைக்கு கொண்டு வருவதால் நஞ்சுத்தன்மை செறிந்துள்ள இந்த மரக்கறிவகைகளை பாவனையாளர்கள் வாங்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. உடல் நலத்திற்கு பெரும் ஆபத்துக்களை விளைவிக்கக் கூடிய கிருமிநாசினிகளை விவசாயிகள் பயன்படுத்தினுல் அவற்றின் நஞ்சுத்தன்மை நன்ருக ஆறியபின்பு சில குறிப்பிட்ட நாட்கள் கழித்தேவிற்பனைக்கு கொண்டு செல்ல வேண்டும்'' என்று கூறினர். யாழ். விவசாய திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது பண்டத்தரிப்பு பகுதியில் பரீட்சார்த்தமாக நடப்பட்ட கோப்பிக்கன்றுகள் வளர்ந்து காய்த்து நல்ல பயனைக் கொடுத்துள்ளன இப்பகுதியிலுள்ள முந்திரிகைத் தோட்டங்களின் மத்தியிலும் மற்றும் வீட்டுத் தோட்டங்களிலும் இந்த கோப்பிக்கன்றுகளை நாட்டி நல்ல பயனைப்பெற முடியும்'' என்று கூறினர்

## ''இளைஞர்களிடம் விரக்தி

### மனப்பான்மை காணப்படுகிறது''

(அரியாலை)

''பெற்றேரை மதிக்கும் மனப்பாங்குபிள்ளைகளிடத்தில் இன்று மிகவும் குறைந்துவருகிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் நாம் எங்கு பார்த்தாலும் வாலிபர்களிடையே விரக்திமனப்பான்மையேஅதிகமாகக்காணப்படுகிறது. குடும்பபாசங்கள் இன்று குறைந்துவருகிறது. மாணவர்கள் ஆசிரியர்களில் நம்பிக்கை கொள்ளக் கூடியதாக ஆசிரியர்கள் தமது மனப்பாங்கை மாற்றியமைக்க வேண்டும். அவர்களின் பிரச்னைகளில் எமக்கும் பங்கும் உள்ளது.''

இவ்வாறு இலங்கை கிறிஸ்தவ ஆசிரியர் சங்க ஒன்றியத்தின் யாழ். மாவட்டக் கிளையினுல் சுன்ருகம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தில் நடாத்தப்பட்ட 'ஞானஒடுக்கத்தில்' அருட்திரு. எஸ். எஸ். அருளம்பலம் அடிகளார் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

சங்கத்தலைவர் திரு. டபிள்யூ. என். எஸ். சாமுவேல் தலைமையில் நடைபெற்ற ஞானஒடுக்கத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு இராஜன் கதிர்காமா பேசுகையில்:- வெளிநாடுகளில் உயர்கல்வி கற்ற அமரர்கள் எஸ்.ஜே. வி. செல்வநாயகம், ஜி. ஜி. பொன்னம்பலம் போன்ற பல பெரியோர்கள், தாய் நாட்டிற்கு வந்து சேவையாற்றினுர்கள். ஆனல் இன்று அந்த நிலைமை மாறி சிறந்த கல்விமான்களும், அறிவாளிகளும் நாளுக்கு நாள் வெளியேறிக்கொண்டிருக்கிறுர்கள். சிறந்த வைத்தியர்கள், பொறியியலாளர்கள் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்களைப் பெற்று நாளுக்குநாள் வெளியேறிக் கொண்டிருக்கிறுர்கள். இதனுல் நமது நாட்டுக்குப் பேரிழப்புக்கள் ஏற்பட்டுவருகிறது. இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியின்மையும், அரசியல் பிரச்னைகளுமே அவர்கள் இப்படி வெளியேறுவதற்குகாரணமாக அமைகின்றன என்று கூறினர்.

ஆச்சிரம பிரதம சேவக் அருட்திரு. சாம். அல்பிரட் அடிகளார் திருவிருந்தாராதனையை நடாத்தி அருளுரை நிகழ்த்திஞர்கள்.

## அயல் கிராமத்தில் தஞ்சம்

[யாழ்ப்பாணம்]

அண்மையில் கைதடி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த பலர் சிகிச்சை பெற்றதாகக் கூறப்படுகிறது.

இரண்டாயிரத்துக்கு மேற்பட்டோர் பீதியடைந்து குடும்பங்களாகக்குடிபெயர்ந்து அயல் கிராமங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

சுமார் 50 பேர்வரை கைது செய்யப்பட்டு அங்கு நடைபெற்ற விசாரணையின்பின் மாணவர் உட்பட 13 பேர் கொண்டு செல்லப்பட்டதாகவும், ஏனையோர் விடுதலை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.


# ஹோம் பிறன்ஸ் லிமிட்டெட்

## உல்லாச பஸ் சேவை மீண்டும் நடைபெறுகிறது!

தற்போதைய சூழ்நிலை கருதி
மாலை 6 மணிக்கு
கன்னுதிட்டி சந்தியிலிருந்து புறப்படும்.

### டிக்கட் பதிவு செய்யுமிடங்கள்

1. ஹோம் பிறன்ஸ் லிமிட், கன்னுதிட்டி.
   தொலைபேசி; 24310
2. நியூ லங்கா சேல்ஸ் சென்ரர்,
   இல 6, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி: 23596
3. நியூ ப்ரசீதா சேல்ஸ் சென்ரர்,
   இல. 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி: 22480


## ரூபவாஹினி

மாலை

5-30 நாட்டுவளம் [சிங்களம்]
5-35 'ஹூடி ஹூட் பெக்கர்' [ஆங்கிலம்]
6-00 விளையாட்டுப் பயிற்சி [சிங்களம்]
6-20 'இயற்கையும் விஞ்ஞானமும்' சிறுவர்நிகழ்ச்சி (சிங்களம்]
6-25 'ஊரும் உலகும்'
6-55 செய்திகள் [தமிழ்]
7-15 'கலை அரங்கம்' நாச்சிமார் கோவிலடி 'ராஜன் வில்லிசைக் குழு'வினரின் வில்லிசை
7-45 வனவிலங்கு வாழ்க்கை பற்றிய சித்திரம் [ஆங்கிலம்]
8-15 செய்திகள் [சிங்களம்)
8-35 'சோயா உணவு தயாரிப்பு' விவரணச் சித்திரம் [சிங்களம்]
9-00 'ஐஸ்ஸ் கேட்டிங்' [சிங்களம்!
9-30 செய்திகள் [ஆங்கிலம்]
9-50 'ஒலிம்பிக்- 84
10-30 உலகச் செய்திகள்
10-35 ஒலிம்பிக் தொடர்ச்சி
11-00 நிகழ்ச்சிகள் முடிவு

## மருந்து தட்டுப்பாடு

[புலோலி]

யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை புலோலி உப- அலுவலக ஆயுள்வேத வைத்திய சாலையில் மருந்து வகைகள் இல்லையாம். இதனுல் இவ் வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# துப்பாக்கிமுனையில் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

இளைப்பாறிய ஆசிரியத்தம்பதிகளின் வீட்டில் இருதினங்களில் துப்பாக்கி முனையில் நகைகளும், ரொக்கப்பணமும் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் றக்கா லேனிலுள்ள எஸ் ஆர். சின்னத்துரை என்பவரின் வீட்டிலேயே இக்கொள்ளைச் சம்பவங்கள் அடுத்தடுத்து நடைபெற்றன.

கடந்த ஜூலை முதலாம் திகதி இரவு, வயோதிபத் தம்பதிகளான சின்னத்துரையும் மனைவியும் அவர்களின் விதவை மகளும் இருந்த பொழுது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி, அவர்களை முழங்காலில் நிற்கச் சொல்லிவிட்டு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளை அடித்துச் சென்றுவிட்டார்களாம்.

அடுத்து ஆகஸ்ட் 6-ம் திகதி இரவும் இனந்தெரியாத நபர்கள் அதே வீட்டுள் புகுந்து மூவரையும் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி 9 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் உட்பட 5 ஆயிரம்ரூபா பெறுமதியான விலைஉயர்ந்த பட்டுப்புடைவைகளை சூட்கேசுடன் கொள்ளை அடித்துள்ளார்களாம்.

கடந்த 15-ம் திகதி இரவும் அவ்வீட்டுள்புகுந்த திருடர்கள் அலுமாரியை உடைத்து களவாட முற்பட்டபொழுது வீட்டுக்காரர் அவலக்குரல் எழுப்பவே திருடர்கள் தப்பிச் சென்று விட்டார்களாம்.

கொள்ளையடிப்பவர்களதும், திருடர்களதும் தொல்லைகளால் வீட்டிலிருக்கும் வயோதிபத்தம்பதிகளும் மகளும் இப்பொழுது வீட்டில் தொடர்ந்து தங்குவதற்கு அச்சமடைந்துள்ளதாக யாழ். பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. (மா)

# இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திகதி: 4 (20-08-1984)
வாரம்: திங்கள்
திதி: அட்டமி, காலை 9-49ன் மேல் நவமி.
நக்ஷத்திரம்; கார்த்திகை முற்பகல் 11-24ன் மேல் ரோகினி.

மேடம்: கண்துடைப்பு வேலைகள் இடம்பெறும் கால் நடைகளினுல் நஷ்டமுண்டு மூத்த சகோதரத்தின் நடவடிக்கை வேதனையைத்தரும் குடும்பத்தில் உறவுமுறைகள் திருப்திகரமாக இருக்காது கருடப்பார்வை உங்களை வட்டமிடும்.

இடபம்: துன்பத்தின் ரேகை படரும் எதற்கெடுத்தாலும் சீறிவிழுவீர்கள் கொடுக்கல் வாங்கல் மூலம் தொல்லைகள் தோன்றும் தொழிற்துறைகளிலும் தொல்லைகள் தோன்றக் கூடும்.

மிதுனம்: பேச்சு வன்மையால் பிறருடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள் கல்வித்துறையில் திருப்திகரமான முன்னேற்றமுண்டு சிறப்பான தினம்

கடகம்: தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும் கடந்தகால எண்ணங்கள் அலைமோதும் அடுத்துக்கெடுப்பதற்கு சிலர் முனைவர் சகோதரவழியால் சஞ்சலமுண்டு.

சிங்கம்: வாழ்வில் இன்று வெற்றித்திருநாள் எதிலும் அதிர்ஷ்டம் உங்கள் பக்கமே இருக்கும் புதிய பொருள் கொள்வனவு செய்வதற்கு நன்று. வெளியிடத்தொடர்புகளும் சிறப்பைத்தரும்.

கன்னி: மற்றவர்களின் இன்னல்கண்டு இரக்கங்காட்டுவீர் வீர்கள் தாராளகுணத்தின் மூலம் பொருளும் செலவாகும் புண்ணிய யாத்திரையுமுண்டு.

துலாம்: பணம் பலவழிகளிலும் செலவாகும் அந்நியர் ஒருவரால் ஏமாற்றப்படலாம் பிரயாணத்தின்போதுபொருள் நழுவக்கூடும் நிதானம் வேண்டும் உறவும் கசக்கும்.

விருச்சிகம்: பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர் குடும்பப் பிரச்சனைகளில் சுமுகமானநிலை உருவாகும் சுற்ருடலில் வேண்டியதைச் சாதிக்கக்கூடியதைச் சாதிக்கக் கூடிய செல்வாக்குப் பெருகும் களஸ்திரவழிச் சுகமும் கிட்டும்.

தனுசு: தொழில்துறையில் எதிர்பாராத நஷ்டத்திற்கு மிடம் உண்டு நண்பனின் கடிதம் வேதனையைத் தரலாம் மனத்திடம் வேண்டும்.

மகரம்: பூமியால் லாபம் உண்டு புத்திரர் புகழ்சேரும் உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம் உணவுவிடயத்தில் அதிகம் கவனம் செலுத்தவும்

கும்பம்: உத்தியோக உயர்வுகளும், உரிமைகளைப் பெறுவதற்கும் உகந்ததாக இருக்கும் பொருள்களை வாங்குவதல் அதிக கவனஞ் செலுத்துவீர்கள் திருப்திகரமான இடமாற்றங்களும் இடம்பெறும்.

மீனம்: உழைப்பினுல் முன்னேற்றம் உண்டு வியாபாரத்தில் விருத்தியேற்படும் உயர் கல்வியில் ஈடுபடுவோர்களுக்கு உற்சாகமானதினம் பொருள் வருவாயும் சிறப்பாகஇருக்கும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## போஷாக்கு வாரம்

(மன்னுர்)

எதிர் வரும் அக்டோபர் மாதம் 2ம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 2ம் திகதி வரை நடை பெறவுள்ளது. அகில இலங்கை போஷக்கு வாரத்தில் மன்னுர் மாவட்ட பாடசாலைகளும் கலந்து கொள்ளும்.

இதனை முன்னிட்டு பாடசாலை மட்டத்தில் சிறப்பான முறையிம் விழாக்கள் நடத்தப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை கல்வி அதிகாரி ஜனுப் கே எம்.வசீர் கல்வித் திணைக்களத்தின் ஆதரவுடன் மேற்கொண்டு வருகிருர்

போஷாக்கு வாரத்தை முன்னிட்டு பாடசாலை மட்டத்தில் கட்டுரை' கவிதை, நாவன்மை, வரைதல் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

## பொதுமக்கள் சிரமம்

(கோண்டாவில்)

கொக்குவில்பிரதான தபால் கந்தோரில் கடந்த மூன்று வாரங்களாக பணம் இன்மையால் காசுக் கட்டளைகள் தபால் கட்டளைகள் மாற்ற வருபவர்கள் பெரும் சிரமம் அடைகின்றுர்கள்.

## வீதி சீர்கேடு

(நெடுந்தீவு)

புங்குடுதீவு பெருங்காடு முருகன் கோவிலடியில் இருந்து ஆஸ்பத்திரி சந்தி வரையிலான சுமார் ஒன்றரை மையில் நீளமுள்ள பிரதான வீதி கடந்த பல மாதங்களாக பராமரிப்போர் இல்லாமல் படு குழியாகவுள்ளது.

பஸ் போக்கு வரத்துள்ள இவ் வீதியின் சில இடங்களில் கற்கள் பரவப்பட்டு பல மாதங்களாகவே தார் இடப்படாமல் இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

# சி. ஐ. டி யினர் எனக் கூறி தங்க நகைகள் கொள்ளை!

## மட்டு நகரில் சம்பவம்

(மட்டக்களப்பு)

தங்களை சி. ஐ. டி. பிரிவினர் என்று கூறிக்கொண்டே மூன்று இளைஞர்கள் கணவனையும், மனைவியையும் அவர்களது காரிலேயே கடத்திச்சென்று 61,000 ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் மட்டக்களப்பிலுள்ள ஆரையம்பதி என்னுமிடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்துள்ளது. இது பற்றி மேலும் கூறப்படுவதாவது:

சம்பவதினம் கணேசன் என்பவர் தமது காரில் ஆரையம்பதியில் இருந்து கிரான்குளத்திற்குச் சென்று தமது தென்னந்தோட்ட வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தவேளை ஒரு காரில் வந்த மூன்று இளைஞர்கள் தாங்கள் சி. ஐ. டி. பிரிவினர் எனக்கூறிக் காரைச் சோதனையிட்டனராம். பின்னர் அவரது வீட்டில் ஆயுதங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டு அவரை வீட்டுக்குக் காரில் அழைத்துச்சென்று வீட்டைச் சோதனையிட்டபின்னர். கணவனையும், மனைவியையும் உயர் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யவருமாறு அழைத்துச் சென்று வழியில் அவர்களை இறக்கிவிட்டு அவர்கள் அணிந்திருந்த 61 000 ரூபா பெறுமதியான தாலிக்கொடி, காப்பு, மோதிரம் ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனராம்.

கடத்தப்பட்ட கார் மட்டக்களப்புச் சந்தையில் அனாதரவாக விடப்பட்டுள்ளது. மட்டக்களப்புப் பொலிசார் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சூ)

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்]

அளவெட்டி அலுக்கை நாவலடி ஞானவைரவர் ஆலய முதலாவது தொண்டர்சபைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

தலைவராக விக்னேஸ்வரனும், செயலாளராக ந. இராஜேந்திரமும், பொருளாளராக கே. எஸ். சிவஞானராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## கடத்தப்பட்டு சுடப்பட்டாராம்

(மாவிட்டபுரம்)

வட்டுக்கோட்டை சங்கரத்தையைச் சேர்ந்த கனகரத்தினம் விக்னராசா (33 வயது) இனந்தெரியாத நபர்களால் கடத்திச்செல்லப்பட்டு, கோப்பாய் கைதடி மயானத்தில் வைத்துச் சுடப்பட்டார்.

இவர் பின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்து தற்போது அங்கு சிகிச்சை பெற்று வருகிறார்

## வடபகுதி வங்கிக்காசோலைகள் மட்டுநகரில் வைப்பிலிடமுடியாது!

[மட்டக்களப்பு]

யாழ்ப்பாணம், மன்னர், வவனியா, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் தற்போது மூடப்பட்டிருக்கும் இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் காசோலைகளை மட்டக்களப்பிலுள்ள எந்தவொரு வங்கியிலும் வைப்புசெய்யமுடியாது என்று மட்டக்களப்பிலுள்ள வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாம். (சூ)

சுன்னுகம் சம்பவம்:

## உதவியளித்த அனைவருக்கும் அரச அதிபர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட சுன்னுகம் பொலிஸ் நிலையக் கட்டிட இடிபாடுகளுக்கிடையில் சிக்குண்டிருக்கலாம் என்று கருதப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதற்காக சேவா உணர்வுடன் முன்வந்து உதவிய அனைவருக்கும், குறிப்பாக காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன அதிகாரிகள், ஊழியர்களுக்கு யாழ். மாவட்ட அமைச்சு செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. மு. பஞ்சலிங்கம் பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளார்.

அரசாங்க செயலகத்திலிருந்து இதுதொடர்பாக விடுக்கப்பட்ட ஒரு குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சுன்னுகம் பொலிஸ் நிலையக் கட்டிடம் கடந்த 11ம் திகதி சனிக்கிழமையன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதின் காரணமாக மரணமான சிலரின் சடலங்கள் மீட்கப்பட்டது தெரிந்ததே. அக்கட்டிட இடிபாடுகளுக்கிடையில் மேலும் சில சடலங்கள் சிக்குண்டு கிடக்கலாம் என்ற சந்தேகத்தில் அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை மீட்புவேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் பெரும் பாரம் தூக்கி யந்திரவசதி இல்லாமையால் அம்முயற்சி கைவிடப்பட்டது.

இவ்விடயம் அரசு அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு அவர் காங்கேசன்துறை சிமெந்துக்கூட்டுத்தாபன தொழில்துறை பொறியியலாளர் திரு. நாகராசாவுடனும் ஏனைய உயர் அதிகாரிகளுடனும் நேரடியாகத் தொடர்பு கொண்டு ஏற்பாடு செய்ததில் பெரும் பாரம்தூக்கி யந்திரம் கொண்டுவரப்பட்டு கட்டிடத்தின் இடிபாடுகள் அப்புறப்படுத்தப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதில் இடிபாடுகளுக்கிடையில் வேறு எந்தச் சடலமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்தப்பெரும் முயற்சியில் மனமுவந்து துரிதகதியில் செயல்பட்ட பொறியியலாளர் வேலை முகாமையாளர் திரு. யோகேந்திரா, வாகனசாரதி ஜெயராசா, இயந்திர இயக்குநகர் கே. தியாகராசா எஸ். சின்னராசா ஆகியவர்களுக்கும் இவைகளைக் கண்காணிப்பு செய்த மேலதிகஅரசாங்க அதிபர் திரு. பி. எவ். பட்றிக், உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. செபநாயகம் அவர்களுடன் சேர்ந்து உதவிய பொது மக்கள் அனைவருக்கும் யாழ் மாவட்ட அமைச்சு செயலாளரும், பதில் அரசாங்க அதிபருமான திரு. மு. பஞ்சலிங்கம் மனமுவந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றார்.

## உணவு முத்திரைபெறுவோர் வெகுவாகக் குறைவர்

[சாவகச்சேரி]

உணவு முத்திரை பெறுபவர்களின் எண்ணிக்கையானது வெகு விரைவில் குறைக்கப்படவுள்ளது.

சமூக சேவைகள், பொது சன பணம் பெறுவோர், அநாதை விடுதிகளில் தங்கியுள்ளோர், மதத்தலைவர்கள் ஆகியோருக்கு மாத்திரமே உணவு முத்திரை வழங்கப்படவுள்ளதாகவும், அவ்வாறானவர்களின் புள்ளி விபரத்தினை உடனடியாகச் சேகரித்து அனுப்பி வைக்கும்படியும் சகல உதவி அரசாங்க அதிபர்களும் பணிக்கப்பட்டுள்ளனர்.

## மட்டக்களப்பு மக்களுக்கு அரச காணிகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரசாங்க காணிகளில் மட்டக்களப்பு, கல்குடா தொகுதிகளிலுள்ள ஐந்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுமுள்ள அரசாங்க காணிகளில் சுமார் 1430 ஏக்கர் நிலம் சுமார்1852 பேருக்கு 43 காணிக் கச்சேரிகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது இக் காணிக் கச்சேரிகளில் அநேகமான கச்சேரி இதுவரை பூர்த்தியடைந்துவிட்டது. மிகுதி அடுத்தமாதம் பூர்த்தியடைந்துவிடும்.

இத்தகவலை மட்டக்களப்பு மாவட்ட பிரதி காணி ஆணையாளர் திரு எம். மார்க் கண்டு தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தகவல் தருகையில், மட்டக்களப்புத் தொகுதியில் கோப்பாவெளி, கொம்மாதுறை, நாவலடி, மஞ்சந்தொடுவாய், புதுக்குடியிருப்பு, ஆரயம்பதி, நாவலடி, கிரான் குளம், மருதன் கட்டனசேனை, சொறுவாழனை, மாவடிதிடல், ஐயர்குளம், உன்னிச்சை, கரடியனுறு, சின்னக்காலடி, கோட்டமடு, மரகட்டகுளம், காட்டுச்சேனை ஆகிய பகுதிகளுடனும், கல்குடாத் தொகுதியில் பட்டியடிசேனை, பன்றிமடு, கொம்மாதுறை, ஈரளக்குளம், காயான்கேணி, வட்டுவான், மாங்கேணி, நல்லாயன் பூமி, பனிச்சன் கேணி, கண்டலடி, முருங்கையடிமுனை, ஊரியன்கட்டு, ஒட்டுமடு, தன்னிப்பனை, கோமத்தலவமடு, துறையடி பூமி, முடவன்கேணி ஆகிய பகுதிகளிலும் காணிகள் வழங்கப்படும் என்றார்.

## சுயதொழில் செய்ய இவர்களுக்கு கடன் உதவி

[பண்டத்தரிப்பு]

''வாழ்க்கைச் செலவுகள் மிகவும் அதிகரித்துவரும் நெருக்கடி மிக்க இக்கால கட்டத்தில் யுவதிகளுக்கு வழங்கப்படும் தொழிற்பயிற்சிகள் அவர்களின் குடும்ப பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு பெரும் உதவியாக இருக்கும் என்பதில்ஐயமில்லை. இந்த வகையில் பண்டத்தரிப்பு வாழ்வொளி நிலையம் கடந்த பல ஆண்டுகளாக யுவதிகளுக்கு அளித்துவரும் தொழிற்பயிற்சிகளை பாராட்டாமல் இருக்கமுடியாது''

இவ்வாறு பண்டத்தரிப்பு வாழ்வொளி நிலைய கைப்பணி பொருட்காட்சியைத் திறந்து வைத்து சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி குறிப்பிட்டார். வாழ்வொளி நிலையத்தின் அதிபர் அன்னை யூலாலி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி தொடர்ந்து உரையாற்றுகையில் ''இந்நிலையத்தில் பயிற்சிபெறும் யுவதிகளின் கைவண்ணத்திலான உற்பத்திப் பொருட்கள் மிகவும் தரம்வாய்ந்தனவாகவும், கவர்ச்சியானவையாகவும் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது இவர்கள் தமது பயிற்சியை முடித்துக்கொண்ட பின்பு சுயமாக கைத்தொழில்களை ஆரம்பிக்க வங்கி மூலம் கடனுதவிகளை பெற்றுத்தரவும் ஆவனசெய்யப்பட்டுள்ளது. ஆகவே இப் பயிற்சிநெறிகளை ஏனைய யுவதிகளும் நன்கு பயன்படுத்தி தங்கள் வாழ்வில் முன்னேற்றம்காணவேண்டும்'' என்றார்.

பண்டத்தரிப்பு பங்குத் தந்தை அருட்திரு ஜெயக்குமார் அடிகளும் உரையாற்றினர்.

## ஆண்டு விழா

(அரியாலை)

சுன்னுகம் கிறிஸ்தவ சேவாச்சிரமத்தின் ஆண்டுவிழா நாளை செவ்வாய்க்கிழமை ஆச்சிரமத்தில் நடைபெறவிருக்கிறது.

காலை ஆச்சிரமத் தேவாலயத்தில் நடைபெறும் பரிசுத்த திருவிருந்து ஆரர்தனையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் காலை திருமுழுக்கும், நன்றி செலுத்தும் ஆராதனையும், அதனைத்தொடர்ந்து கலந்துரையாடலும். நண்பகல் மன்றாட்டு ஜெபமும் பிற்பகல் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

திருவிருந்து ஆராதனையை ஆச்சிரமத் தலைவர் சேவக் அருட்திரு. சாம். அல்பிரட் அடிகளார் ஒப்புக்கொடுத்து அருளுரை நிகழ்த்துவார்கள்.

## இ.த.ஆசிரியர் சங்கம்

(பண்டத்தரிப்பு)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தை அடுத்த மாத இறுதியில் நடாத்துவதற்கு முன்னேடியாக நாட்டிலுள்ள வட்டாரக்கல்வி அதிகாரி பிரிவுகள் தோறும் இயங்கிவரும் 35 கிளைகளின் உத்தியோகத்தர் தெரிவுகளையும் 10 மாவட்டக்கிளைகளின் உத்தியோகத்தர் தெரிவுகளையும் இம்மாத இறுதிக்குள் நடாத்தி முடிப்பதற்கு சங்க தலைமைப்பீடம் துரித நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றது.

## செஞ்சிலுவை சங்க பிராந்திய அலுவலகம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அடிக்கடி ஏற்படும் இயற்கையின் தாக்குதல்களின்போது பாதிக்கப்படும் மக்களுக்கு உடனடியாக நிவாரண வேலைகளை மேற்கொள்ளுவதற்காகச்செஞ்

(8ம் பக்கம் பார்க்க)

தையல்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுசம்பந்தமான கடிதம் ஒன்றைத் தொண்டமானுறு கிராமோதய சபைத்தலைவரும், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமான திரு. ரீ. துரைரத்தினம் கிராம அபிவிருத்தி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,6-30
சிவாஜி - சரோஜாதேவி
என் தம்பி

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
BAD BLOOD
Action-Adults Only
திகிலூட்டும்மர்மச்சித்திரம்

மனோகரா (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
சிவாஜி - பத்மினி
சாவித்திரி - தேவிகா
சரஸ்வதிசபதம்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
கமல்-சுஜாதா
கடல் மீன்கள்
(கலர் - புதிய பிரதி)

வின்சர் (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-30,6-30
எம். ஜி. ஆர்.-சாவித்திரி
வீரப்பா - சந்திரபாபு
மகாதேவி
(புத்தம் புதிய பிரதி)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,6-00
சிவாஜி-கிரிஜா
கண்ணும்மா
மனோகரா
(புதிய பிரதி)

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, —2-30,
4-30 — 7-00
STIAR
GRAZY
(Adults Only)

றீகல் (யாழ். நகர்)
10-30, 2-15, 4-30, 6-30
Terrence Hill
Bud Spencer ...
"WHO FINDS A FRIEND FINDS A TREASURE"
[Latest Action - Comedy]
(வேதனைகளுக்குள்ளும் உங்களை சிரிக்க வைக்கிறார்கள்)

லிடோ யாழ். நகர்
தினசரி 10-30,, 2-30 6-30,
சிவாஜி - நிர்மலா
சௌகார் ஜானகி
பாபு [புதிய பிரதி]

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர்-லதா நடித்த
நவரத்தினம்
(ஈஸ்மன் கலர்)

## பட்டதாரி ஆசிரியர்

# இடமாற்றம் இவ்வருடம் அமுல்செய்ய ஏற்பாடு

(கொழும்பு)

கடந்த ஆண்டு அமுல்செய்யப்படவிருந்து பின்னர் கைவிடப்பட்ட பட்டதாரி ஆசிரியர் இடமாற்றத் திட்டத்தை இவ்வாண்டு அமுல்செய்வதற்குவேண்டிய நடவடிக்கைகளைக் கல்விச் சேவைக் குழு மேற்கொண்டுவருகிறது.

இத்தகவலை கல்விச் சேவைக் குழு உறுப்பினர் டாக்டர் ஆ. கந்தையா தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

கடந்தஆண்டு ஜுலை மாதத்துக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் இடமாற்றப் பட்டியலை ஆராய்ந்து நாட்டின் தென் பகுதியிலிருந்தும் ஏனைய பகுதிகளிலிருந்தும் வடபகுதிக்கு இடமாற்றம் கோரியோருக்கு உடனடியாக இடமாற்றம் வழங்கலாம்.

வடக்கு கிழக்கிலிருந்து தென் பகுதிக்குச் செல்லவிரும்பிவிண்ணப்பித்தோரினதும் ஏனையோரினதும் இன்றைய விருப்பத்தை அறியவேண்டியிருப்பதால் அவர்களினது நிலைகுறித்துப் பரிசீலனை செய்யவேண்டியுள்ளது. எனவே பொது இடமாற்றத் திட்டத்திற்கமைய இடமாற்றம் பெறவிரும்பும் தகுதியுள்ள சகல ஆசிரியர்களும் விண்ணப்பித்தால் முன்னைய திட்டத்தை அமுல் நடத்துவதில் சிரமத்தைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

இதேவேளையில் இவ்வாண்டு அக்டோபர் மாதம் நடுப்பகுதிக்கு முன்னர் பொது இடமாற்றத்திற்கு விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப் படிவம் சகல பிராந்திய கல்வித் திணைக்களங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## செஞ்சிலுவை

(7ம் பக்கத் தொடர்ச்சி)

சிலுவைச் சங்கத்தின் பிராந்திய அலுவலகமொன்று கல்லடியில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த அலுவலகம் அமைவதற்கான கட்டிடத்தை மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் திரு. பந்துலா அபேசேகராவிடம் கையளித்தார்.

## கொழும்பு சென்ற...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பில்லை எனக் கருதிபெற்றோர்கள், அவர்களை, கொழும்பிலுள்ள உறவினர்கள் வீடுகளுக்கு அனுப்பிவைத்ததாக கூறப்படுகிறது.

கைதான 15 இளைஞர்கள் பற்றி பெற்றோர்கள், மேலிடத்துடன் தொடர்பு கொண்டுள்ளனர்

(க)

# நீதிமன்ற பாதுகாப்பில் உள்ள தெய்வச் சிலை

[யாழ்ப்பாணம்]

1979ம் ஆண்டு பொலிஸாரால் மீட்கப்பட்ட ஒருஅடி உயரமுள்ள சிலை ஒன்று யாழ். நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. இச்சிலைக்கு உரிமையுள்ள கோவில் தர்மகர்த்தா உடனடியாக யாழ். நீதிமன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இருந்தநிலையில் உள்ள இச்சிலை, உடுக்கைவாள் ஆகியவற்றுடன் தலையில் சுடரும் கொண்டதாக உள்ளது.

கோவில் ஒன்றில் 79ம் ஆண்டு கொள்ளை அடிக்கப்பட்ட இச்சிலையை பொலிஸார் மீட்டசமயம், சந்தேகநபர், லொறி விபத்தொன்றில் சிக்கி மரணமானர்.

இதன் பின் சிலை நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. (க)

# சுவீப் முடிவுகள்

[கொழும்பு]

தேசிய லொத்தர் சபையின் 974-வது சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு
**08 S 0196**
ரூபா 2 லட்சம்

இரண்டாவது பரிசு
**19 S 0101**
ரூபா 75 ஆயிரம்

மூன்றாவது பரிசு
**22 P 0318**
ரூபா 25 ஆயிரம்

ரூபா 2070 கொண்ட 100 ஆறுதல் பரிசுகள் பெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:-

02 B 0662 — 03 B 0397
06 B 0774 — 07 B 0100
08 B 0826 — 09 B 0628
17 B 0827 — 23 B 0005
13 C 0181 — 14 C 0834
01 D 0965 — 02 D 0609
05 D 0543 — 06 D 0642
08 D 0118 — 09 D 0616
07 F 0058 — 11 F 0545
13 F 0252 — 19 F 0143
01 G 0237 — 03 G 0915
15 G 0813 — 22 G 0908
02 H 0750 — 14 H 0376
20 H 0578
03 J 0831 — 09 J 0860
12 J 0075 — 16 J 0300
16 J 0326 — 24 J 0654
20 K 0489
06 L 0193 — 10 L 0023
12 L 0683 — 25 L 0932
26 L 0696
02 M 0644 — 08 M 0376
12 M 0173 — 16 M 0305
06 N 0750 — 08 N 0634
09 N 0500 — 21 N 0957
25 N 0166
03 O 0843 — 09 O 0824
20 O 0175 — 26 O 0288
25 O 0282
01 P 0316 — 14 P 0666
23 P 0495 — 24 P 0538
25 P 0068
04 Q 0353 — 05 Q 0178
12 Q 0030
05 R 0540 — 09 R 0044
04 S 0035 — 08 S 0690
09 S 0346 — 11 S 0980
14 S 0494 — 16 S 0312
16 S 0329 — 17 S 0874
23 S 0008
02 T 0065 — 15 T 0422
21 T 0763 — 25 T 0074
17 U 0932 — 20 U 0343
09 V 0059 — 18 V 0210
23 V 0845 — 26 V 0173
02 W 0893 — 04 W 0424
08 W 0736 — 16 W 0542
22 W 0752
05 X 0475 — 11 X 0369
01 Y 0790 — 02 Y 0585
06 Y 0481 — 17 Y 0047
17 Y 0591 — 24 Y 0965
02 Z 0718 — 15 Z 0148
19 Z 0010 — 21 Z 0083
21 Z 0872

[இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்].

## அமைச்சர்கள்பற்றி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைசெய்வதற்கு முதல் அமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரன் தலைமையில் நான்கு பேர்கொண்ட கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது

இந்தக் கமிட்டியில் நிதி அமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன், மின்துறை அமைச்சர் எஸ். ராமச்சந்திரன், பால்வளத்துறை அமைச்சர் கிருஷ்ணசாமி, வேளாண்மைத்துறை அமைச்சர் காளிமுத்து ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். [கு]

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை தெய்வேந்திரன்

நைஜீரியாவில் அகால மரணமடைந்த சூராவத்தை சுன்னுகத்தைச் சேர்ந்த பொறியியலாளர் திரு. பொன்னுத்துரை தெய்வேந்திரன் அவர்களின் ஈமக்கிரியைகள் 22-8-84 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் சூராவத்தை இல்லத்தில் நடைபெறும். நண்பர்கள், உறவினர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும். —மனைவி, பிள்ளைகள்.

1395

## மரண அறிவித்தல்

### அ. க. சின்னத்துரை

அ. க. சின்னத்துரை (முன்னுள் பிரபல புடவை வர்த்தகர்) காலமாகி விட்டார். அன்னார் சிறிதேவியின் அன்புக் கணவரும், சிவபாக்கியம், பங்கையச் செல்வி, மங்கையர்க்கரசி, கருணுகரன் (Bank of Credit and Commerce லண்டன்), கௌசலா (ஜேர்மனி), சிவசங்கரன் (சுவிற்சலாந்து) ஊர்மிளா (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் தகப்பனும், சிவப்பிரகாசம் (அப்போதிக்கரி நயினதீவு), ஆனந்தசிவம் (லண்டன்), முருகேசு (நீர்ப்பாசன இலாகா கிளிநொச்சி), இந்திரா, நரேந்திரகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று 20-ம் திகதி திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு (9-00 மு. ப.) 228/1 நாவலர் றேட் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கோம்பையன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்ரூர், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

1394

## யாழ். மாவட்டத்தில்

# பனந்தும்பு உற்பத்தியை ஊக்குவிக்க நடவடிக்கை

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் பனந்தும்பு உற்பத்தியை ஊக்குவிப்பதிலும், கொள்வனவு செய்வதிலும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை கவனம் செலுத்தி வருகின்றது.

இதற்கு முன்னேடியாக இலங்கை பனை அபிவிருத்திச்சபையின் அனுசரணையுடன் ஏற்றுமதி உற்பத்திக்கிராம (மக்கள்) கம்பனிகள் சாவகச்சேரியிலும் புலோலி — பருத்தித்துறையிலும் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த ஏற்றுமதி உற்பத்திக் கிராமக் கம்பனி வடமராட்சிப்பகுதியிலுள்ள குடத்தனை, நாகர்கோவில் அம்பன் ஆகிய இடங்களில் குடிசைக் கைத்தொழில் அடிப்படையில் ஐம்பது குடும்பங்களை தும்பு உற்பத்தியில் ஈடுபடுத்தத் திட்டமிட்டுள்ளது.

பொலிகண்டியிலுள்ள பனை வெல்லத் தொழிற்சாலைக் கட்டிடத்தில் பனம்தும்பு உற்பத்தி சுத்திகரிக்கும் இயந்திரம் ஒன்றையும்நிறுவ இக்கிராமக் கம்பனி முடிவுசெய்துள்ளது.

பளை, பூநகரி, முல்லைத்தீவு, மன்னார், பருத்தித்துறை ஆகிய இடங்களில் உற்பத்தி செய்யப்படும் பனந்தும்பையும் கொள்வனவுசெய்து சுத்திகரித்துச் சந்தைப்படுத்தும் பொறுப்பையும் இவ் ஏற்றுமதி உற்பத்திக்கிராமக் கம்பனி பொறுப்பேற்றிருக்கிறது.

# கிளிநொச்சியில் சிறுபோக வேளாண்மை திருப்தி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை மேற்கொள்ளப்பட்ட சிறுபோகவேளாண்மை மிகவும் திருப்திகரமாக அமைந்துள்ளதென மாவட்ட விவசாய செயல்படுதிட்ட விவசாய குழு மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப மகாநாடு கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தில் அரசாங்க அதிபர் திரு. என். ஜெயநாதன் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. சண்முகராசா, உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எம். சுப்பிரமணியம், அபிவிருத்திக்கு பொறுப்பான உதவி அரசாங்க அதிபர் க. குணராசா, மேலதிக விவசாய பிரதிப்பணிப்பாளர் சீ. ஜயரட்ணம், பிரதிநீர்ப்பாசனப்பணிப்பாளர் திரு. எம். சபாரத்தினம், பிரதிதிட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். பி. செல்வநாயகம் உட்பட விவசாய அதிகாரிகள், உதவி அரசாங்க அதிபர்கள், கமநலசேவை நிலையத் தலைவர்கள், உயர் அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

சிறுபோக வேளாண்மையின் பரப்பளவு முன்பு திட்டமிட்டதைவிட கூடுதலாக மேற்கொள்ளப்பட்டதெனவும் தொடக்கத்தில் 5,040 ஹெக்டயர் நிலத்தில் சிறுபோகம் செய்ய திட்டமிடப்பட்ட போதும் பின்னர் மீள்பரிசீலனை செய்யப்பட்டு 6,419 ஹெக்டயர் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டதெனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

## பயிற்சி நெறி

[பண்டதரிப்பு]

வடலியடைப்பு கிராம அபிவிருத்தி சங்கம் யாழ் தொழில் திணைக்களத்தின் ஆதரவுடன் ஆரம்பிக்கவுள்ள தச்சுவேலைப் பயிற்சி நெறியில் அனுமதி பெறவிரும்பும் வட்டுக்கோட்டை தொகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் தங்கள் விண்ணப்பங்களை இம்மாத இறுதிக்குள் சங்கச் செயலாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டைத் தொகுதியில் நிரந்தரமாக வசிக்கும் பதினெட்டு வயதுக்கும் முப்பது வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்கள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும், ஒன்பது மாதகாலம் நடைபெறவுள்ள இப் பயிற்சிக்கு அனுமதிக்கப்படும் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு ஐந்து ரூபா வீதம் உதவிப் பணம் வழங்கப்படும் என்றும், பயிற்சி முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## குருநகர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சகல திணைக்களங்களுக்கும், அத்திணைக்களங்களில் கடமையாற்றும் ஊழியரின் சம்பளம், குருநகர் வங்கிக்கிளையில் வழங்கப்படும்.

### ஆசிரியர் சம்பளம்

யாழ். மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களின் சம்பளம் இம்மாதம் 22-ம், 23-ம் திகதி குருநகர் வங்கி கிளையில் வழங்கப்படும்.

குருநகர் வங்கி கிளையில் அந்தந்தப் பகுதி வங்கிக்கிளை உத்தியோகஸ்தர்கள் தனித்தனிப் பிரிவாக கடமையாற்றுவார்கள். ஆசிரியர்கள் தங்கள் பிரிவில் சம்பளத்தை பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாளையும், 22-ம் 23-ம் திகதியும், வங்கிகிளை காலை 9 மணிமுதல் 11 மணிவரை திறந்திருக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [க]

## இடமாற்றக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த ஆசிரியர்களில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்துக்கு முன்னர் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்து பொலிஸ் அறிக்கையை வைத்திருப்பவர்களில் இதுவரைஇடமாற்றம் கிடைக்காதவர்கள் நேரில் கல்விச் சேவைக்குழுவுடன் தொடர்பு கொண்டால் இடமாற்றத்தைப் பெற்றுக் கொள்ளலாம என்றும் இவர்களுக்கு நேரிலேயே இடமாற்றக்கடிதங்கள் வழங்கப்படும் என்றும் டாக்டர் கந்தையா கூறினார்.

## காயமடைந்த...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டு பத்திரிகையாளர்களும் இராணுவ உயர் அதிகாரிகளும் நேரடியாக பார்வையிட்டு விபரங்களை சேகரித்ததுடன் புகைப் படமும் எடுக்கிறார்கள்.

இராணுவ உயர் அதிகாரிகள் நோயாளர்களுக்கு ஆறுதல் கூறுவதுடன் சம்பவங்கள் குறித்து கவலை அடைவதாகவும் நோயாளர்களுக்கு தெரிவித்தார்கள்.

## 2-வது சபைபற்றி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசனை நடத்துவதற்காக சர்வகட்சி மகாநாட்டில் கலந்து கொள்ளும் கட்சிக்குழுக்களின் தலைவர்களையும் அக்குழுக்களின் பிரதிநிதிகளில் ஒவ்வொருவரையும் நாளை மாலை 6மணிக்கு பண்டாரநாயக்கா மகாநாட்டு மண்டபத்தில் கூடும்படி ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அழைப்பு விடுத்துள்ளது தெரிந்ததே.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.